உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩.] விசுவாவசுஹு ஆனிமீ [பகுதி-அ

## தமிழ்ப்பெருமை.

தமிழ்நாட்டிலே மூன்றுசங்கம் இருந்தனவெனவும் முதற்சங்கத்தின்கண்ணே அகத்தியர் தமிழ் ஆராய்ந்தாரெனவும் முதலிலே முசிரி ஆசிரியர் நீலகண்டனுர் தாம் இயற்றிய இறையனுர் அகப்பொருள் உரையிற்கூறினுர். இதனையே பின்னிட்ட புலவரும் உரையாசிரியரும் கைக்கொண்டனர். சேனவரையரும் நச்சினர்க்கினியரும் தமது தொல்காப்பிய உரையிலே அகத்தியத்திலிருந்து சூத்திரம் மேற்கோளாக எடுத்துக்காட்டினர். சங்கரநமச்சிவாயர் தமது நன்னூற்காண்டிகை உரையிலும், மயிலேறும்பெருமாள்பிள்ளை தாம் எழுதிய கல்லாட உரையிலும் அகத்திய சூத்திரங்கள்சில தமது உரைக்கு வேண்டியவிடத்துப் பொருந்தக்காட்டினர். ஆயினும் இவ்வுரையாசிரியர்களுக்கு முற்பட்ட பேராசிரியர் இளம்பூரணர் முதலியோராவது சங்கப்புலவராவது அகத்தியத்திலிருந்து சூத்திரங்கள் மேற்கோளாகக் காட்டவுமில்லை: தமது காலத்தில் அகத்தியம் வழங்கிவந்ததாகச் சொல்லவுமில்லை. மேலும் தொல்காப்பியர் இட்ட சாபத்தினலே அகத்தியம் வழங்காமற்போயிற்றென்றும் பல உரையாசிரியரும் கூறிப்போந்தனர்.

தொல்காப்பியர் அகத்தியருடைய மாணக்கர் என்பதற்குப் போந்தசான்று தொல்காப்பியத்திலாவது வேறு சங்கநூல்களிலாவது புலப்படவில்லை. தொல்காப்பியப்பாயிரத்திலே "ஐந்திரநிறைந்த தொல்காப்பியன்" என்றும், "அதங்கோட்டாசான் அரிறப" என்றும் "முந்துநூல்கண்டு முறைப்பட எண்ணி" என்றும் வெ

ளிப்படையாக விளம்பியிருத்தலால், ஆரியத்திலுள்ள இந்திரவியா கரணம் கற்றுத்தெளிந்து அதற்கிணங்கத் தமிழிலே இலக்கணஞ் செய்தார் என்றும், அந்நூலிலுள்ள குற்றங்குறைகளை அதங்கோட்டாசான் களைந்தனர் என்றும், முன்னோர் எழுதிய நூல்களிற்கண்டவற்றை முறைப்பட வகுத்தனர் என்றும் பலரும் தெளியப் பகர்ந்திருத்தலால், அக்காலத்திலே அகத்தியம் என்று ஓர் நூல் உண்டோ இல்லையோ என யாம் ஐயுறும்படி நேரிடுகின்றது.

கல்வியிற் பெரியாராய கம்பரும் தாம் மொழிபெயர்த்த ராம கதையில் "தமிழெனுமளப்பருஞ் சலதிதந்தவன்" "சுடர்க்கடவுள் தந்ததமிழ்தந்தான்" என அகத்தியரைத் தமிழுக்கு முதலாசிரியர் எனப்புகழ்ந்திருந்தும், "என்றுமுளதென்றமிழியம்பியிசைகொண்டான்" என்று அவ்வகத்தியரையே குறித்துள்ளாராதலால், அகத்தியருக்குமுந்தித் தமிழ்மொழியும் தமிழ்நூலும் இருந்ததாகக் கம்பர் கருதினரென்று நாம் உணரலாகும். இலக்கியம் இருந்தன்றோ இலக்கணம் எழுதலாகும். அகத்தியம் தமிழ் இலக்கணமாயின் அதற்கு முந்திய தமிழ்நூல்களும் இன்றிமையாது இருத்தல்வேண்டும்.

பரம்பரையாய் வந்த வரலாறு இன்னதென்றும் அது முதலிலே இறையனார் அகப்பொருள் உரையிலே வெளிவந்ததென்றும் பகர்ந்தோம். இனித் தமிழின் பழமையை நாமே ஆராய்ந்து நோக்குவோமெனின், ஆங்கிலத்தில் (Philology) பாஷாசாஸ்திரம் அல்லது மொழியியல் என்னும் ஓர் புதிய நூல் நமக்கு வழிகாட்டுங் கருவியாகும். ஒருதேசத்தார் தாய், தகப்பன், மாடு, மக்கள், நீ, நான் என்னும் பொருள்பட வழங்குஞ் சொற்கள் மற்றொரு தேசத்திலும் அதே பொருள்பட வழங்குமாயின் அவ்விருதேசத்தாரும் முற்காலத்திலே, ஒன்றாய் ஓரிடத்திருந்தவரென்று துணியப்படும். மேற்சொல்லிய வார்த்தைகளாற் குறிக்கும்பொருள்கள் இன்னொருதேசத்திலே முழுவதும் மாறான ஒலியுள்ள மொழிகளாற் பெயர்கூறப்படுமாயின் பின்னிட்ட தேசத்தவர் முழுவதும் வேறு குலத்தவர் என்றும் வேற்றிடத்தவர் என்றும் ஏற்படும். ஆங்கிலத்தில் (mother) மதர் என்னும் மொழிக்கு ஆரியத்தில் மாதுரு எனவும், (father)

பாதர் என்பதற்கு பிதுர் எனவும், (brother) ப்ரதர் என்பதற்கு ப்ராதா எனவும், (cow) கௌ என்பதற்கு கோ எனவும், (you) யு என்பதற்கு யுவம் எனவும், (I) ஐ என்பதற்கு அகம் எனவும், வழங்கி வருதலால், இப்பொழுது இந்தியாவிலிருந்து எண்ணாயிரம்மைல் தூரத்திலே ஆங்கிலேயர் குடியிருந்தபோதிலும், பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக ஆரியரும் ஆங்கிலேயரும் ஒரே குலத்தவர் என்றும் ஒரே நாட்டவர் என்றும் பாஷாசாஸ்திரம் துணிந்து கூறும். இவ்வாறே தமிழ்மொழிகளையும் ஆரியமொழிகளையும் ஒத்துநோக்கின் ஒன்றும் ஒவ்வாதிருத்தல் காணலாம். ஆரியமும் ஆங்கிலமும் எம்மட்டில் ஒத்திருக்கின்றனவோ அங்ஙனம் தமிழும் சீனமும் ஒத்திருக்கின்றன. தமிழில் நீ என்னும் மொழிக்கு சீனத்தில் 'நீ' என்றே வழங்குகிறார். நான் என்பதற்கு 'ஞான்' என்றும், யாம் என்பதற்கு 'யாம்' என்றும், பெண் என்பதற்குப் 'பெண்' என்றும், எஃகு என்பதற்கு 'எஃ' என்றும், கண் (அல்லது இடம்) என்பதற்குக் 'கண்' என்றும், ஈர் (அல்லதுஇரண்டு) என்பதற்கு 'ஈர்' என்றும், மை என்பதற்கு 'மை' என்றும் வழங்குதலால் தமிழரும் சீனரும் பண்டைக்காலத்திலே ஒரே குலத்தவர் என்றும், ஒரே நாட்டிலிருந்தவர் என்றும் புலப்படும். இதற்கேற்கவே தமிழ் மூவேந்தருள் ஒருவனாகிய சேரன் வானவன், வானவரம்பன், இமையவரம்பன் எனப் பெயர் பூண்டான். இந்நாளிலும் சீனதேசத்தார் தங்களை வானவர் என்றும் மற்றையோரிலும் குலத்தில் உயர்ந்தவராகவுங் கொண்டாடுவார்கள். இமயமலையின் வடபாலில் உள்ள மிகவும் உயர்ந்த மேட்டுத்தரையில் அவர்கள் முற்காலத்திற் குடியிருந்ததனால் தங்களை வானவர் எனவும், பள்ளத்தாக்கிலும் மலையடிவாரங்களிலும் உள்ள மற்றவர்களைத் தங்களுக்குக் கீழ்ப்பட்டவரெனவும் எண்ணியிருந்தார்.

வடவேங்கடந் தென்குமரியின் இடையே உள்ள நாட்டில் வந்து குடியேறுவதற்கு முன்னே தமிழர் கங்கைக்கரையில் இருந்தார் என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. தமிழருக்குள்ளே வேளாளர் என்னும்ஜாதியார் தம்மைக் கங்காகுலத்தவர்என்று கூறுவர். கன்னடதேசத்திலுள்ள வேளாளர் தங்களைக் கவுடர் என்றும், கொ

ங்குதேசத்து வேளாளர் தங்களைக் கவுண்டர் என்றும் வழங்குவது இவர் கங்கைக்கரையிலுள்ள கவுடதேசத்திலிருந்து வந்தோர் என்பதற்குச் சாட்சியாகும். இப்போது மைசூர் என்று பெயர் கூறப்படும் மஹிஷநாட்டை (அல்லது எருமை நாட்டை) வேளாளர் படை எடுத்துச்சென்று கைக்கொண்ட பிற்பாடு கங்கைவாடி என்று அந்நாட்டுக்குப் பெயர் வழங்கினர். அந்நாட்டு அரசரும் தம்மைக் கங்கைவம்சம் என்றும் பெல்லாலமன்னர் என்றும் வழங்கியது பழைய பட்டயங்களிலும் கல்வெட்டுக்களிலும் காணலாம்.

தமிழர் சோழநாட்டிற் குடியேறியபொழுது பங்காளநாட்டிற்கு இராஜதானியாகிய சம்பாநகர் என்னும் பெயரையே தாங்கள் உண்டாக்கிய பட்டணத்துக்கும் இட்டனர். தமிழ்நாட்டில் உண்டான இந்தச் சம்பாநகர் அல்லது சம்பாபதி பின்னிட்டுக் காவிரிப்பூம்பட்டினம் அல்லது புகார் என்று பெயர் பெற்றிருந்தது.

மேலும், தமிழ்நாட்டிலே தொன்றுதொட்டுள்ள போர்வீரருக்கு மறவர் என்றே பெயர் வழங்கிற்று. இக்காலத்திலும் வடஇந்தியாவிலே மார்வார் என்னும் ஜாதியார் பெயர்பெற்ற போர்வீரராய் க்ஷத்திரியர் என்ற ஜாதியாராகி விளங்குகிறார். தமிழருக்குள்ளே பள்ளர் அல்லது பள்ளிகள் என்னும் ஜாதியாருக்கு ஒப்பாகப் பங்காளத்திலும் நாளதுவரையிலும் பல்லெ, பால என்னும் ஜாதியார் உண்டு. இந்நாட்டிலுள்ள பறையருக்கு ஒப்பாகப் பஹெறையர் என்று பங்காளத்தில் ஒரு ஜாதியாருண்டு. அவர்களும் தமிழ்நாட்டிலுள்ள பறையரைப்போலத்தனிவழிகளிலும் இராக்காலங்களிலும் திருடுவதிலும் கொள்ளையடிப்பதிலும் மிக்க விருப்பமுள்ளவராய் இருக்கிறார். இங்ஙனம் ஊரின் பெயரும், பல மரபினர் பெயரும் பங்காளத்திலும் தமிழ்நாட்டிலும் ஒத்திருப்பதால், தமிழர் பங்காளத்திலிருந்துவந்து தென்னாட்டிற் குடியேறியதற்கு யாதோர் ஐயமும் இல்லை. சோழநாட்டுக்கும் தொண்டைநாட்டுக்கும் இடையே உள்ள தேசத்திற்கு மகதநாடென்றும், மலையமானாட்டுக்குச் சேதிநாடென்றும் வடக்கே உள்ள நாடுகளின் பெயர் இட்டதும், தமிழர் வடநாடுகளிலிருந்து குடி எழுந்து வந்ததற்குச் சான்றாகும்.

பாண்டவர் குலத்திலே இருபத்தைந்தாவது தலைமுறையில் உள்ள உதயணன் என்னும் வெற்றிவேற்கை அரசன் வரலாற்றைக் கூறுகின்ற உதயணன்கதையிலே மகதநாட்டு இராஜதானியாகிய இராஜகிருகம் என்னும் பட்டணத்தின் சிறப்பை உரைக்குமிடத்தே பின்புவருமாறு ஆசிரியர் கூறுகின்றார்.

"விண்ணுற நிவந்த பண்ணமை படைமதில்
வாயிலு மருங்கினுங் காவல் கண்ணி
வேந்துபிழைத் தொழுகினுங் காய்ந்து கலக்கறாஅ
முழுப்பரி சார முதற்க ணெய்தி
விழுப்பெருஞ் செல்வமொடு வென்றி தாங்கிய
வைம்பதி னிரட்டி யவனச் சேரியு
மெண்பதி னிரட்டி யெறிபடைப் பாடியு
மன்பெருஞ் சிறப்பி னாயிர மாகிய
தலைப்பெருஞ் சேனைத் தமிழச் சேரியுங்
கொலைப்படுங் கடுந்திறற் கொல்லச் சேரியு
மிலேச்சச் சேரியுந் தலைத்தலை சிறந்து."

இதனால் நூறு யவனச்சேரியும், நூற்றறுபது எறிபடைப்பாடியும், ஆயிரம் தமிழச்சேரியும் இன்னுங் கொல்லச்சேரியும் மிலேச்சச்சேரியும் இராஜகிருகம் என்னும் பட்டணத்தைச் சூழ்ந்திருந்தன என்று தோன்றும். ஆயிரஞ்சேரியிலிருந்த தமிழர் மகதத்தரசனுக்குத் தலைப்பெருஞ்சேனையாக இருந்தார்என்பதனால், அக்காலத்திலே மகதநாட்டிலே மற்ற ஜாதியாரைப்பார்க்கிலும் தமிழரே மிக்க போர்வீரராகவும், அரசனுடைய பரிவாரங்களில் முதன்மையானவராகவும் இருந்தனர்எனத்தோன்றும். பாரதப்போர் கி. மு. பன்னிரண்டாவது நூற்றாண்டில் நடந்ததாகப் பலரும் சம்மதித்துள்ளார். ஆகையால் பாண்டவர்க்குப் பின்னிட்டு இருபத்தைந்தாவது தலைமுறையிலுள்ள உதயணன் கி. மு. எழாவது நூற்றாண்டில் அரசாண்டதாக ஏற்படும். ஆகவே இற்றைக்கு இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுக்குமுன்பாகத்தமிழர் மகதநாட்டில் வாசஞ்செய்தனர்எனத்துணியலாம். அக்காலத்திலேயே தமிழரில் ஒரு பகுதியார் தென்னாட்டிலும் வந்து குடியேறியிருந்தார் என்பதற்கு ஐயம்இல்லை.

பூர்வத்திலே தமிழர் மகதநாட்டிலே குடியிருந்தார் என்றால் இக்காலத்திலும் அம்மகதநாட்டில் தமிழர் உண்டோவென்று ஆராய்வோமாயின் இந்நாளிலும் பங்காளத்திற்கு வடக்கே, நேபாளத்திற்குக் கிழக்கே "திமல்" என்னும் ஒரு ஜாதியார் மிகுதியாக வசிக்கிறார் என்று தெரியவருகின்றது. இந்தத் திமலருடைய பாஷை தமிழ் மொழிக்குப் பலவாறு ஒத்திருக்கின்றது. ஆகையால் "திமல்" என்னும் பெயரே தமிழ் என நாளடைவிலே மருவி வழங்கியதாகக் கொள்ளலாம். கங்கைக்கரையிலே முற்காலத்துள்ள முக்கியமான துறைமுகமாய "தமிழுக்" என்னும் பட்டணத்திற்கு அப்பெயர் அமைந்தது, இந்த "திமல்" அல்லது தமிழ் என்னும் ஜாதியார் விசேஷமாக அவ்விடத்தில் வசித்ததனால் என்று நினைக்கும்படியிருக்கின்றது.

மேற்கூறியவற்றால், தமிழ் தென்னாட்டிலேயுள்ள பொதியமலையிலே பிறந்ததன்று: வடநாட்டிலே இமயமலைச்சாரலிலே உண்டானதெனத் தோன்றும். அதனால் நாம் தலைப்பில் மேற்கோளாக எடுத்துக்கொண்ட வெண்பாவிலே "ஓங்கலிடைவந்து" என்னும் தொடருக்குப்பொதியமலையிலேபிறந்து என்று பொருள்கொள்ளாது ஓங்கல்களுக்கெல்லாம் ஓங்கலாகிய இமயமலையினிடத்தே தோன்றி எனப்பொருள்கொள்வதே பொருத்தமாகும்.

இதுவரையிலே "ஓங்கலிடைவந்து" என்னும் மொழிகளுக்கு உரைகூறினம். இன்னும் அங்ஙனம் மேற்சொல்லிய வெண்பாவிற்கு உரைப்போமாயின் காலம் நீடிக்குமாதலால் இம்மட்டில் நிறுத்தச் சபையாருடைய அனுமதி கேட்போம்.

இது நிற்க: இந்த மங்கலப்பாண்டிவளநாட்டிலே, அன்னம் பயில்பொழில் ஆலவாயாகிய பழம்பதியிலே முற்காலத்திலே செங்கோல்செலுத்திச் செந்தமிழ்வளர்த்த பாண்டியமன்னரில் ஒருவரே இந்நாளிலே பிறந்து பாண்டித்துரையெனப் பெயர்வகித்து மதுரையிலே செந்தமிழ்ச்சங்கம் ஏற்படுத்தினர் என்று நாம் நினைக்கும் வண்ணம், நமது பாண்டித்துரையவர்கள் இச்சங்கத்தினை நிலைநிறுத்திச் சென்றநாலுஆண்டும் தமிழ் மாணுக்கருக்குப் பரிசளித்தும் ஏட்டிலிருந்த அரிய தமிழ் நூல்களை அச்சிடுவித்து வெளிப்படுத்தியு

ம் "செந்தமிழ்" என்னும் பத்திரிகை வாயிலாய்த் தமிழைவளர்ப்பதற்குப் பலவாறாக முயன்றும் வருவதனாலே அவர்களைத் "தமிழ்காக்கும் பெருமான்" என்றே நாம் போற்றல்வேண்டும்.

"தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்தின் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் மண்ணல் யானை
யணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே."

என்பதற்கு இணங்க இச்சங்கம் இப்பொழுது ஓர் ஆலம் வித்தைப்போன்று சிறிதாயிருப்பினும் நாளடைவிலே தழைத்துக் கிளைகள்பரப்பி விழுதுவிட்டுப் பலவிடத்தூன்றித் தமிழகமுழுவதும் நிழற்றுமென்று வாழ்த்துவோம்.

---

உ

சிவமயம்.

# * திருக்குறள்-வீட்டின்பால்,

## Theosophy of the Kural.

திருவள்ளுவதேவரின் பெருமையும் அவர் திருக்குறளின் பெருமையும் யாவரானும் அளப்பரிதென எவர்க்கும் தெரிந்ததே. நாயனார் தம் வாய்மொழியானன்றி உலகிற்கு மேலான அறத்தைத் தாமே ஒழுகியும் காட்டினர். துறவறத்தை நன்குமதித்தும், சில ஞானக் கள்ளர்களைப்போல் அத்துறையை நாடாது, இல்லறத்தினின்றுமே பிறவிக்கடலை நீந்தலாகுமென்பதனைக் காட்டி, எந்நிலையினராயினும் தத்தம் நிலைக்குரிய தொழிலைச்செய்து உயிர்வாழ்வதே மேலான ஒழுக்கமென உழைப்பின் பெருமையையும் புகட்டி, யாவர்

* இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச்சங்கத்து நான்காவது வருஷோற்சவ தினங்களுளொன்றாகிய 1905-ஆ மேமீ 25உ காலை, ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கள் அக்கிராசனம் வகித்த வித்துவசபையிற் படிக்கப்பெற்றதாகும்.

மாட்டும் அன்புபூண்டொழுகுவதே மேலான அறமெனவும் காட்டி, மனத்துறக்கமடைந்து தெய்வ பத்தியிற் சிறந்து அவருடைய அதீத பக்குவ நிலையை விளக்கிநின்றுர். ஓர் ஆங்கிலேய சரித்திரக்காரர், "உலகிற் பெரியோரெனக் கொண்டாடுபவரெல்லாம் சிலகுற்றம் குறைபாடுள்ளவர்களாகக் காணப்படுகின்றுர்" என்றனர். காளிதாசப்புலவரும், 'வெண்ணிலாவிற் களங்கமிருப்பது குற்றமாயினன்றே, அம்மேன்மக்கள் குற்றமும் குற்றமாகு'மென்றனர். இவ்வுரைகள் உலகியலுக்கு எவ்விதமாக ஒப்பினும், இக்குற்றம் குற்றமேயென, நாயனர் தம்மொப்பற்ற புனிதவாழ்வினல் நிலைநிறுத்தினர். எவ்விதத் தீங்கினையும் நினைத்தலும் செய்தலுமின்றி, எவ்விதப் பற்றுக்களையும் களைந்து எவ்வுயிரினிடத்தும் அன்பு பூண்டொழுகுவது அருமையினும் அருமையன்றே? அவ்வித அருமையும் பெருமையுமன்றே நம் நாயனரது.

மேல், திருக்குறளின் பெருமையைப்பற்றிப் பேசப்புகின், தமிழ்ப்புலமையில் மிகச்சிறந்த கனம் ஜீ. யூ. போப்பையரின் உரை மிகவும் கருதற்பாலது. அவர், இந்நூல் எப்பாடையினும் ஒப்புயர்வற்றதெனக் கூறியுள்ளார். இது சாமானிய உரையன்று. இலரோ, லத்தின், கிரீக் முதலிய ஐரோப்பிய பூர்வீக பாடைகளிலும், ஆங்கிலேயம், பிரஞ்சு முதலிய தற்கால பாடைகளிலும் புலமையடைந்தவரும், இந்திய பாடைகளில் அநேகம் தெரிந்தவருமாயுள்ளவர். ஆக அநேக பாடைகள் அரசுரிமைபெற்று நடக்கும் இக்காலத்திலும், இத்திருக்குறள் இப்பெரும்புகழ் பெறுமாயின், இந்நூல் பிறந்த காலத்திலேயே கல்விச் செருக்கடைந்திருந்த மதுரைச் சங்கப் புலவர்களாற் போற்றப்பட்டது என்பது ஆச்சரியமன்று. நூலாசிரியர் இழிகுலத்திற் பிறந்தவரென்றது உண்மையாகுமேல், அவர் மேலும், அவர் திருக்குறள்மேலும் புலவர்கள் பலரும் சொரிந்த புகழும் பெருக்கமடைந்தது. அச்சங்கப்புலவருள் ஒருவர் இந்நூலை வேதமென்றுர். மற்றெருவர் அவ்வேதம்போலல்லாது யாவர்வாய் மடுப்பினும் இச்சொல் தன்னுற்றல்குன்றுது பயன்படும் என்றுர். ஒருவர் இதனை தேவாமிர்தமென்றனர். மற்றெருவர் அவ்வமிர்தம்போலல்லாது யாவரும் பருகற்கினியதென்றுர். இன்னு

மொருவர், "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய, வந்த விரு வினைக்கு மாமருந்து" என்னவும், நமக்குமே நாவிற் சுவையூறுகின் றது. ஒருவர் நம்மகவிருளை நீக்கி மனக்கமலத்தைமலரச் செய்யும் ஞானசூரியனைக் கூறியுள்ளார். இன்னொருவர் அறம் தகழியாகவும் பொருள்திரியாகவும் இன்பம்நெய்யாகவும் செஞ்சொற் றீயாகவும் குறட்பா தண்டாகவும் அமைந்து நம்மகவிருளைநீக்கும் விளக்கென் றார். வடமொழியிலுள்ள சிலசூத்திரங்கள் போலல்லாது சுருங்கச் சொல்லுதலோடு, ஐயந்திரிபற விளங்கவைத்தலையும், சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறப்புற்றிருத்தலையும் இச்சங்கப் புலவர்கள் பாடியுள்ளார். "சர்வதர்மங்களும் சர்வசாஸ்திரவிஷயங்களும் அடங் கியிருக்கும் பெருநூலிதுவே : எல்லாப்பொருளும் இதன்பாலுள: இதன்பாலிலாத வெப்பொருளுமில்லையால்" என்னும் வாக்கியத்தால் விளக்கியிருக்கின்றார்.

மேல் கல்லாடர் என்னும் புலவர் இந்நூலின் அரியதாகிய ஒரு மேன்மையைப் பின்வரும் பாட்டாற் சிறப்பித்தனர்.

ஒன்றே பொருளெனின் வேறென்பர் வேறெனி
னன்றென்ப ராறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி.

அஃதாவது, திருவள்ளுவர்வாக்கானது எல்லாச் சாஸ்திரங்களின்சார மாயும், எல்லாச்சமயிகட்கும் சம்மதமாயுமுள்ள சமரச சித்தாந்த மாகும். ஆகவே, அன்றுதொட்டு எல்லாச்சமயிகளும் அவரைத் தம்பாலவரெனக்கொண்டு அன்புபாராட்டி வருகின்றனர். ஆதலால் அவர் வாய்மொழி பொய்யாமொழி யென்பதும், நிர்மலமாயுள்ள தென்பதும், ஒப்புயர்வற்ற நீதிசாத்திரமாயும் சமயசாத்திரமாயுமு ள்ளதென்பதும் பெறப்படும்.

மேலித் திருக்குறள் அறம்பொருள் இன்பமென முப்பாலாக வகுத்துளது. இம்முப்பாலின்றிறத்தைப்பற்றித் தமிழினும் ஆங்கி லேயத்தினும் பண்டிதர் பலர் அநேகமாகப் பேசியிருத்தலின், அவ ற்றைப்பற்றி ஈண்டு விசாரியாதுவிடுத்தாம். ஆயின் இங்கு எடுத்த விசாரணைதான் என்னையெனின் திருக்குறளின், வீட்டுப்பாலைப்பற்றி

*

யேயாம். என்னை? ஆன்றோர் பலரும் இது முப்பால் நூலென்று கொண்டிருக்கவும், வீட்டுப்பாலும் இதன்கண் உளதென்பதற்குச் சான்றென்னையெனின், முற்கூறிய சங்கப்புலவர்களே, நம் நாயனுரை "முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்", ஆகக்கொண்டிருக்கின்றனர். இன்னும், "அறம்பொரு ளின்பமும் வீடென்னும் நான்கின் திறந்தெரிந்து செப்பியதேவு" என்றும், "அறனறிந்தேமான்ற பொருளறிந் தேமின்பின் திறனறிந்தேம் வீடுதெளிந்தேம்" என்றும் கூறியுள்ளார். ஆகவும் துறவறமாகிய காரணவகையானன்றி இலக்கணவகையால் வீட்டைப்பற்றிக் கூறிற்றில நூல்கள் என்று பரிமேலழகர் கூறியதனுல் துறவறத்துள் வீட்டினைப்பற்றி குறிப்பாகக் கூறினுர் என்பதும் தெளிக. வீடென்பது "சிந்தையு மொழியும் செல்லா நிலைமைத்து" என்பதை ஒப்பினும், அவ்வீடென்பதும் ஒன்றுண்டோ, வீடடைபவன் எவன், வீடடையும் வழி யாது என நிகழும் வினுக்களுக்கு விடைபகரும் நூல்களே ஞானசாத்திரமாக யாவரும் கொள்ளுகின்றனர். ஆகவே இவர் விஷயத்தில் நம் நாயனுரின் கருத்து என்னையெனக் கொஞ்சம் கூர்ந்து விசாரிக்கப்புகுவாம். அவர் கருத்தும், "கடவுள் வாழ்த்து" என்னும் முதலதிகாரத்திலும், "நீத்தார்பெருமை" யென்ற மூன்றுமதிகாரத்திலும், "நிலையாமை" "துறவு" "மெய்யுணர்தல்" என்னுமதிகாரங்களிலும் கிடக்கக்காணலாம்.

மேல் இம்முதலதிகாரம் கடவுள்வாழ்த்தாகக் கூறினும், இதிற் கடவுளதுண்மையும், அவனது இலக்கணமும், வீடடையவிரும்புவானிலக்கணமும் அடையும் வழியும் விரித்துக்கூறியுளது. முதற்குறளில், கடவுள்தான் உண்டோ என்னும் ஆசங்கையை நீக்க, "ஆதி பகவன் முதற்றே யுலகு" என்னும்மொழிகளாற் 'காணப்பட்டதாகிய உலகம் ஒருவனுல் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும்' என்னும் நியாயவாயிலாக நிலைநிறுத்தினுர். இன்றுவரையும் உள்ள நூல்களிற் கடவுளதுண்மை கூறற்கு இந்நியாயந்தான் விசேடித்ததாயிற்று. இவ்விஷயமே, சிவஞானபோத முதற்சூத்திரத்தினும், பிரம்ம சூத்திரம் இரண்டாமவற்றினும் விஸ்தரித்துள்ளது. ஆதியென்ற சொல்லானது உலகத்தோற்றத்தின் மேற்று, கடவுள் ஆதியுமந்த

மும் இல்லாதவனுகையால்; "போற்றியருள்கநின் னுதியாம் பாதம லர்" என்றதினும், ஆதியென்னும் சொல் பகவானின் சிருஷ்டிகிருத்தியத்தையே விளக்கிநின்றது. உலகு என்னும் சொல் உளாகாரர் ஈண்டுயிர்கண்மேனின்றது என்றூராகலின், ஆதிபகவன், உலகு, உயிர்கள் என முப்பொருள் உண்மையும் பெறப்பட்டது. இம்முப்பொருள்களில், கடவுளது முதன்மை கால இடவகையானன்று என்பதனை ஓர் உவமைவாயிலாக விளக்கிக் காட்டினுர். இறைவன் அகரம் போலுமுயிர்: உலகுயிர்கள் மெய்போலும்உடல்: உலகுயிராகிய இருபொருள்களும் இறைவனுக்கு உடலாகும் தன்மையானே உலகென ஒன்றுபடுத்திக் கூறினுர். இவ்வுவமானவாயிலாய், இறைவனுக்கும் உலகுயிர்களுக்கும் உள்ளசம்பந்தம் இனைத்தெனக் காட்டினுர். இறைவனும் உலகுயிர்களும் ஒன்ருே; இரண்டோ, அன்ருே என்னும் வினுக்களுக்கு ஒன்றென்றும்; இரண்டென்றும்; அன்றென்றும் கூருமல், அவற்றின் சம்பந்தம், உயிர் மெய்யெழுத்துக்கள் போலாமென்றனர். இச்சம்பந்தமும் என்னையெனின், உயிரெழுத்தும் விகாரத்தானன்றி, நாதமாத்திரையாய் இயல்பாற்பிறந்து தானே ஒலிக்கும் வலியுளது. மெய்யெழுத்தோ தன் இயற்கையானன்றி, உயிரோடு கூடிமட்டும் ஒலிக்கப்பெறும். அஃதாவது "அ ஆ" முதலிய உயிர்கள் தாமே ஒலிக்கலாம்: ககரமுதலிய எழுத்துக்களை ஒலிக்கப்புகுங்கால்: க (க்—|—அ) என்றேனும், இக் என்றேனும் ஒலிக்கலாமேயன்றி, அகர, இகரங்களை விடுத்து ஒலிக்க இசையா. அம்மட்டன்றி, உயிரெழுத்தினின்றும் மெய்பிறந்ததாகக்கொள்ள எவ்வித ஏதுவுமின்று. அகரத்தினின்றும் ககர சகரங்கள் எக்காலத்தினும் ஒலிக்கா. ஆகவே உயிர்மெய் யெழுத்துக்கள் ஒன்ருே வேருே, என்னும் வினுநிகழ்த்தும்போது, ஒன்றெனின், உயிரினின்றும் மெய்பிறக்கவேண்டும்: வேறெனின், தானுகவே ஒலிக்கவும்வேண்டும். ஆகவே இவை ஒன்றுமன்று: இரண்டுமன்று. ஒன்ருகாமல், இரண்டாகாமல், ஒன்றுமிரண்டு மின்ருகாத சம்பந்தம் வேறேனும் உளதோ எனின், அச்சொற்களே அப்பொருள்களைவிளக்கும். உயிர் என்னும் சொல்லே ஆன்மாவிற்கு உரியபெயராகவும், நம்முடலே மெய்யாகவும், இவ்வுடலுயிர்ச்சம்பந்தம் இனைத்தென அறிந்த பரமஞானியே தமிழ்வகுத்த அகத்தியனுராகவும், அவர் இவ்வுடலுயிர்ச்சம்பந்தம் இவ்வெழுத்துக்

களிற் கண்டுணர்ந்து அவைகளுக்கிட்ட பெயராகும். அத்தமிழை அ-உயிர், க்-மெய்யெனக் கற்கப்புகும் பாலனுமதலையும், ஞானசாத்திரத்தின் முதலெழுத்துக்களைக் கற்பவனுவன்.

மேல் நம்முடலுயிர்ச் சம்பந்தமுமே என்னையென விசாரிக்கப் புகின் இவ்விஷயம் சைவசித்தாந்த சாத்திரங்களினன்றி யேனை நூல்களிற் விஸ்தரிக்கக் கண்டிலேம். ஆனல் பேயன் என்னும் பண்டிதர் தாம் எழுதிய 'உயிர் உடல்' (Mind body) என்ற நூலிற் பின்வருமாறு சித்தாந்தப்படுத்தியிருக்கின்றார்.

"இடம்கொண்ட அசத்துடன் உயிர் ஒன்ருயிருக்கக் கண்டோம். ஆயின், உயிர் உண்மையில் இடங்கொண்டபொருள் அன்று. ஆகவே இடங்கொண்ட அசத்துடன் சேரா. இவ்வரிதாகிய சம்பந்தத்தைக் குறிக்கும் சரியான பதம் கிடைப்பது கஷ்டம். சரியான உபமானமும் கஷ்டம். மற்றெல்லாச் சம்பந்தங்களையும் நோக்க, இந்த சம்பந்தம் விபரீதவிரோத சம்பந்தமாயிருக்கின்றது."

எனினும் நம்மான்ளுேர் இவ்வுடலுயிர்ச் சம்பந்தத்தைக் குறிக்கவே, உயிர்மெய்யெழுத்துபமானத்தைக் கைக்கொண்டனர். பேயன் பண்டிதர் கண்டவண்ணமே நம்மவர்களும் இச்சம்பந்தமும் ஒன்ருகாம லிரண்டாகாமல் ஒன்றுமிரண்டுமின்ருகாமலென்ற, விபரீதமும் விரோதமுமாகவே காண்கின்றார்கள். எனினும் இப்பொருள்களை ஒன்ருகவும் இரண்டாகவும் எண்ணவும் கூடும். இச்சம்பந்தத்தை விளக்கச் சரியான சொல் ஏற்படாவிட்டாலும்,இஃது உண்மையாமென யாவரும் அங்கீகரிக்கற்பாலதன்ளுே? ஆதலாலன்ளுே நாயனர் கூறியவுண்மையும், சர்வசாஸ்திரஸாரமாகவும், சமரசஞானமாகவும் கொள்ள இடமுண்டாகிறது.

ஆகவே: இறைவன் உலகுயிர்களின் சம்பந்தம், நம்முடல் உயிர் போன்றும் உயிர்மெய்யெழுத்துப்போன்றுமுள்ளது என்பது திண்ணம். இதனுண்மை, மெய்கண்டதேவரது "அகர வுயிரின்றேல் அக்கரங்களின்ரும்" என்னு மூதுரையை மனதிலமூத்த இன்னும் விளங்கும். ஸ்ரீகண்டசிவமும் தம்பாடியத்தில் உலகுயிர்கட்கு இறைவன் உயிராம் தன்மையை விளக்கியிருப்பதைச் சித்தாந்ததீபிகை 5-வது புத்தகம் 95-ம் பக்கம் காண்க.

மேலும் உயிர் மெய்யாகாது—மெய் உயிராகாது எனினும், உயிரன்றி மெய்பிறவாது மெய்யுடன் உயிர்பிரிவின்றி நிற்றலும் காண்கின்றோம். இதனால், இறைவன் சூக்குமலக்ஷணமாகிய "ஒன்று நீயல்லை யன்றியொன்றில்லை" என்பதும் விளக்கியதாமெனக.

இறைவன் உயிரென்றதினாலும், படைத்தல், ஆக்கல், அழித்தல் முதலிய தொழில்வன்மையாலும், அவன் இயற்கையறிவுடையவன் முற்றறிவனென்பதும் பெறப்பட்டது. அதுகொண்டே உலகுயிர்கள் அவன் சந்நிதியில் அறிவற்ற அசேதனம்போலும், அசைவித்தாலன்றி அசையா, அறிவித்தாலன்றி அறியா எனவும் ஏற்பட்டன. இக்கருத்தை வலியுறுத்தும்பொருட்டே, இரண்டாம் குறளில் இறைவனை 'வாலறிவன்' எனவும் இறைவனை வாழ்த்தி வணங்கி அருள்பெறாத உயிர்களின் கல்வியறிவைப் பயனற்றதாகவும் குறித்தார். கல்வியறிவின்பயனும் அவனையடையவேண்டுமென்பதும், 'தாள்' என்ற சொல்லால் அவனது பெருமையும் நமது சிறுமையும் பெற்றாம்.

(இன்னும் வரும்.)

ஜே. எம். நல்லசாமிபிள்ளை.

---

# இடைச்சங்கம்.

ஸ்ரீரங்கத்தில், புதியதாக வெளியிடப்படும் "ஸ்ரீவாணீவிலாஸினி" என்னும் பத்திரிகையின் இரண்டாம் சஞ்சிகையிலே, "தலைச்சங்கம் மகாபாரதகாலத்தை யொட்டி யிருந்தது" என்பதற்குப் பல காரணங்கள் காட்டி ஒருவியாசமெழுதி முடித்தோம். இனி அடுத்த இடைச்சங்கநிலையை ஆராய்வதற்கு இச் 'செந்தமிழ்' ப்பகுதியை நிலைக்களமாகக் கொண்டு தொடருவோம். தலைச்சங்கம் இன்ன காலத்தது என்பதற்குப் போதிய சாதனங்கள் காணப்பட்டன; இடைச்சங்கத்துக்கோ அவ்வாறு அதிகமின்மையால், நமது விஷயம் பெருகுதற்கு இடமில்லையாயினும், அதன் காலவெல்லையை

ஒராற்ருல் முடிவுபடுத்தற்குச் சிலஆதரவுகளும் இல்லாமற் போக வில்லே. தலேச்சங்க வரலாறு போலவே, இடைச்சங்கச் செய்திகள் சிலவும் இறையனர் களவியலுரைப் பாயிரத்திலே வரையப்படுகின் றன. அவையாவன :— "இடைச்சங்கமிருந்தார் அகத்தியனரும் "தொல்காப்பியனரும் இருந்தையூர்க்கருங் கோழியும் மோசியும் "வெள்ளூர்க்காப்பியனும் சிறுபாண்டரங்கனும் திரையன்மாறனும் "துவரைக் கோமானும் கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம் பத்தொன்பதின்மரென்ப; அவருள்ளிட்டு மூவாயிரத் தெழுநூற்று "வர் பாடினரென்ப; அவர்களாற் பாடப்பட்டன கலியுங் குருகும் "வெண்டாளியும் வியாழமாலேயகவலு மென இத்தொடக்கத்தன "என்ப; அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபு "ராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமுமென இவை; அவர் "மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப. அவரைச் "சங்கமிரீஇயினர் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திரு "மாறனீருக ஐம்பத்தொன்பதின்மரென்ப; அவருட் கவியரங்கேறி "னர் ஐவர்பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது "கபாடபுரத்தென்ப; அக்காலத்துப்போலும் பாண்டியநாட்டைக் "கடல் கொண்டது." என வரையப்பட்டுள்ளன. இச் செய்தி களெல்லாம் கர்ணபரம்பரைகளே என்பதை, "என்ப" என்னும் முற்றுச் சொல்லானே ஒவ்வொரு வாக்கியமும் முடிந்திருத்தலால் அறியலாம். இவற்ருல் அகத்தியனர் காலமுதலாக முடத்திரு மாறன் காலம் வரை இடைச்சங்கம் நிகழ்ந்ததென்பது வெளியாகின் றது. இம்முடத்திருமாறன் காலத்தேதான் கடல் பாண்டியநாட் டிற் சில பகுதியை அழித்ததாகவும், அக்கடல் கோளில் அழிந்த கபாடபுரம் என்னுந் தலேநகரை விட்டு, அவ்வரசன் மதுரையைத் தன்றலேநகராக்கி அங்கே கடைச்சங்கத்தைத் தொடங்கினனென வும் அக்களவியலுரைப்பாயிரத்து வரையப்பட்டுள்ளன. இதனல், இடைச்சங்கத்தின் முடிவும் கடைச்சங்கத்தின் ஆரம்பமும் அரச னெருவன் காலத்தே நிகழ்ந்தன என்பது தெளிவாகின்றது.

மேற்கூறிய இடைச்சங்க வரலாறுகள் ஒவ்வொன்றையும் வேறு கருவிகொண்டு உண்மையென்று சாதித்தல் இப்போது அருமை

யாயினும், அவற்றுள்ளே கடல் பாண்டிநாட்டின் ஒரு பகுதியை விழுங்கிய விவரமட்டில் உண்மையுடைய தென்பதற்குப் போதிய ஆதாரவுகள் உள்ளன. கடைச்சங்கநாளிலே இக்கடல்கோட்செய்தி பேசப்பட்டு வந்தது என்பது,

" மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியோடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன் "

எனக்கலித்தொகையிலும், (க0௪)

" வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடு கொடுங்கடல் கொள்ள "

எனச் சிலப்பதிகாரத்தும் வருதலால் அறியலாம். இவற்றுள்ளே பின்னதில், பாண்டிநாட்டின் தென்கோடியில் இக்கடல்கோள் நிகழ்ந்ததென்று குறிப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே, 'வடவேங்கடந் தென்குமரி யாயிடை" என்னுந்தொல்காப்பியப் பாயிரத்துக்கு உரையெழுதுமிடத்து, உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள், " மங்கலத்திசையாகலின் வடக்கு முற்கூறப்பட்டது; கடல்கோள்வதன் " முன்பு பிறநாடு முண்மையிற் றெற்கும் எல்லை கூறப்பட்டது; கிழ " க்கும் மேற்கும் பிறநாடின்மையிற் கூறப்படாவாயின " என்று எழுதிப்போகின்றார். " வினையினீங்கி " என்னும் மரபியற்சூத்திரவுரையில், பேராசிரியர்—"பனம்பாரனார் வடவேங்கடந் தென்கு " மரியாற்றினை எல்லையாகக் கூறிப் பாயிரஞ்செய்தமையின், சகரர் " வேள்விக்குதிரை நாடித்தோட்ட கடலகத்துப்பட்டுக் குமரியாறு " பனைநாட்டோடு கெடுவதற்கு முன்னையதென்பதும்" என வரைந்தனர். சிலப்பதிகாரத்து வரும் " நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும் " என்ற வேனிற்காதை அடிகளின் உரையிலே இக்கடல்கோளைப்பற்றி அடியார்க்கு நல்லார் எழுதுவன அடியில் வருமாறு:— " முதற்சங்க காலத்துக் கவியரங்கேறிய எழுவர் பாண்டியருள் ஒருவனும் தொல்காப்பியஞ் செய்வித்தோனுமாகிய

"சயமாகீர்த்தி" என்ற நிலந்தருதிருவிற்பாண்டியன்காலத்தே, பாண்டிநாட்டுத் தென்பாலிமுகத்துக்கு வடவெல்லையாகிய "பஃறுளி" என்னும் யாற்றிற்கும் "குமரி" என்னும் யாற்றிற்கும் இடையே எழுநூற்றுக்காவத ஆறும், இவற்றின்கண்ணவாகிய ஏழ் தெங்கநாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன்பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகரைநாடும் ஏழ்குறும்பனைநாடுமென்னும் இந்நாற்பத்தொன்பது நாடும், குமரி கொல்ல முதலிய பன்மலைநாடும், காடும், நதியும், பதியும் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறும் கடல் கொண்டொழிந்தது ......... இதற்கு "வடிவேலெறிந்த ......... கடல் கொள்ள" எனவரும் சிலப்பதிகார அடிகளும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையும், உரையாசிரியராகிய இளம்பூரண வடிகள் முகவுரையும் மேற்கோள்களாமெனவும் கூறிப் போந்தனர். நச்சினார்க்கினியர், அடியார்க்குநல்லார் கூறியவாறே, தெற்கே கடலாற் கொள்ளப்பட்டவை நாற்பத்தொன்பது நாடுகள் என்று தொல்காப்பியப் பாயிரவுரையில்வரைகின்றார். இவற்றால் முற்கூறிய கடல்கோள் தமிழ்நாட்டின்றெற்கே, குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடையிலிருந்த நிலத்தை விழுங்கியதென்பது ஐயமின்றிப் போதரும். ஆனால், கடல் விழுங்கிய அவ்விடைநிலம் எழுநூற்றுக்காததூரமுடைய நாற்பத்தொன்பது நாடென்று, அதன் வகையெலாங்காட்டிச்சென்றார் அடியார்க்குநல்லார். இதனைக்குறிப்பாக ஆதரிக்கின்றார் நச்சினார்க்கினியார். நான்கு கூப்பீடு அளவுடைய காதமென்பது இப்போதைய இரண்டு மைல் தூரமாக வைத்துக்கொண்டாலும், 700-காதத்துக்கு 1400-மைலளவு நிலம் கடல் கொண்டதாக முடிகின்றது. இவ்வளவு பெருந்தூரம் அக்கடல்கோட்காலத்துப் பரதகண்டத்தில் அழிவுற்றதென்பது ஒப்பத்தக்கதாகத் தோன்றவில்லை. சிலர் பல்லாயிர வருஷங்கட்குமுன்பு, ஆபிரிகாகண்டம் ஆசியாகண்டத்துடன் ஒன்றியிருந்ததைப் பிரிவுபடச்செய்த கடல்கோட்செய்தியைக் குறிப்பதே, அடியார்க்குநல்லார் எழுதியதென்று கூறுகின்றனர். அந்நிகழ்ச்சி ஒருகால் உண்மையாயிருப்பினும், பாரதகாலத்துக்குப் பிற்பட்டதென்று தெளியப்பட்ட இடைச்சங்க வரலாற்றோடு அஃது எவ்வாற்றானும் பொருத்தமுடையதன்றாம். இவ்வா

று பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடைப்பட்ட நிலம் 700-காவதநீளமுள்ளதென்று அடியார்க்குநல்லார் எழுதியது ஒருபுறம் நிற்க: அவ்வுரையாசிரியர்க்கும் முற்பட்ட சிலப்பதிகார அரும்பத வுரைகாரர் கக-ஆம் காதை ககூ-ஆம் அடியுரையில் "பஃறுளியாறு-குமரிப்பக்கத்ததோர் யாறு" என்றெழுதியுள்ளார். இது குமரியாறும் பஃறுளியாறும் நெருங்கியுள்ளவையே என்பதை விளக்கி, அடியார்க்கு நல்லார் கூற்றோடு முரணுகின்றது. இதனால், அவ்விரண்டாற்றுக்கும் இடைப்பட்டதொரு சிறுநாடே தென்னாட்டில் அழிந்ததாகல் வேண்டுமென்பது பெறப்படும். பேராசிரியர் எழுத்தாக நாம் முதலிற் காட்டியதில், "குமரியாறு பனிநாட்டோடு கடல்கொள்ள" என வந்த சொற்றொடரைக்கொண்டு, அவ்வாறழிவுற்ற நிலப்பகுதி பனிநாடென்று தெரியலாம். இனி, நாற்பத்தொன்பது பெருநாடுகள் அப்போது அழிந்தன என்பதற்குச் சிறந்தமேற்கோள் நூல்களிற் காணப்படவில்லையாயினும், அந்நாற்பத்தொன்பதும் அவ்விரண்டாற்றுக்கும் இடையிலிருந்த சிறு சிறு நிலப்பகுதிகளே எனக் கொள்ளின், ஒருவாறு பொருந்தலாம். எங்ஙனமாயினும், 1400-மைல் நீளமுள்ளபூமி இந்தியாவில் முற்காலத்து அழிவுற்றதென்பதற்குச் சிறந்த ஆதாரங்கள் கிடையா என்பதே நாம் கூறுவது. ஆனால், இடைச்சங்கநாளில் ஒரு கடல்கோளாற் பாண்டிநாட்டின் ஒருபகுதி முழுகிவிட்டதென்பது மறுக்கப்படாதது. அன்றியும் பாண்டியன், தன்னாட்டிற் சில பகுதியைக் கடல்கொண்டதற்குப் பிரதியாகச் சேரசோழ நாடுகளில் முறையே குண்டூர் முத்தூர் என்னுங்கூற்றங்களிரண்டை வென்றுபெற்று நிரப்பினனென்று அவ்வடியார்க்கு நல்லாரே சிலப்பதிகாரக் காடுகாண்காதை 17-22-ஆம் அடிகளின் விசேடவுரையில் வரைந்திருக்கின்றனர். முற்காலத்திலே கூற்றமென வழங்கியது இப்போது "ஜில்லா" என வழங்கும் நிலப்பிரிவுக்கும் அதிகமானதன்று. ஆக, இழந்த பாகத்துக்குப் பிரதியாகப் பாண்டியன் பெற்றது இரண்டுகூற்றங்களேயாயின், அவ்விழந்த நிலம் 1400-மைல் நீட்சியதாகுமா? இதனால், இரண்டுகூற்றம் அளவுள்ள நிலங்களே அப்போது சமுத்திரத்தால் விழுங்கப்பட்டதென்பது விளக்கமாம். பாண்டியன் சேரசோழநாடுகளினின்று தானிழந்த நிலத்துக்குப் பிரதிநிலம் பெற்றானென்பது, "மலிதிரை

*

யூர்ந்துதன் மண்கடல் வெளவலின், புலியோடு வின்னீக்கிப் புகழ் பொறித்த கிளர்கெண்டை" எனக் கலித்தொகையினும் குறிப்பாக வுரைக்கப்பட்டமை காண்க.

இனி, மேற்கூறிய அடியார்க்குநல்லார் செய்திகளில், முதற் சங்கத்துப் பாண்டியருள் ஒருவனாகிய சயமாகீர்த்தி என்ற நிலந்தரு திருவிற்பாண்டியன் காலத்தே கடல்பொங்கி 49-நாடுகளை அழித்த தென்றும், இஃது இறையனார்களவியலுரையாலும் உரையாசிரியரா கிய இளம்பூரணவடிகள் முகவுரையாலும் பெறுதும் என்றும் எழு தப்பட்டிருக்கின்றன. அவ்வுரையாசிரியர் பிரமாணமாகக்கொண்டவ ற்றுள்ளே, களவியலுரை, இடைச்சங்கத்திறுதியிலிருந்த முடத்திரு மாறன்காலமே அக்கடல்கோட்காலமென்று ஊகிக்கின்றதேயன்றி, முதற்சங்ககாலமென்று கூறிற்றில்லை. இதனை முதற்கண், யாங்கு றித்த அக்களவியலுரைப்பாயிரத்தாற்றெளிக. "முதற்சங்கத்தார் இருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரை என்ப" எனத் தலைச்சங்கவரலாறு எழுதுமிடத்து அவ்வுரையில் வரையப்ப ட்டிருப்பது, இடைச்சங்கமுடிவில் நிகழ்ந்தகடல்கோளால், தலைச்சங் கத்தவரிருந்து தமிழாராய்ந்த தென்மதுரையும் அழிவுற்றதுநோக் கிப் பின்னோர் கூறியதேயன்றி, தலைச்சங்ககாலத்து நிகழ்ந்த செய்தி யன்று. உண்டேல், அக்கடல்கோள் நிகழ்ச்சியை முதற்சங்க வரலா ற்றோடு சேர்க்காது "இடைச்சங்ககாலத்துப்போலும் பாண்டியநாட் டைக் கடல்கொண்டது" என அவ்வுரைப்பாயிரம் ஊகிக்கவேண்டிய காரணமென்னை? ஆனால், தலைச்சங்ககாலத்தில் ஒருகடல்கோளும், இடைச்சங்ககாலத்து ஒருகடல்கோளுமாக நிகழ்ந்தன என்பதற்கு ஆதாரவே கிடையாது. இறையனார் களவியலுரை ஏனையவுரைகளெ ல்லாவற்றினும் பழைமையுடையதாதலால், பிற்பட்ட ஏனையோர் கூறும் செய்திகளினும் அதிகநம்பகம்வைத்தற்கு அஃது ஏற்றது. அடியார்க்குநல்லாருரைச்செய்தி அதனோடு மாறுபடுமாயின், அவ்விர ண்டனுள் நாம் முன்னதையே பிரமாணமாகக் கொள்ளவேண்டுமென் பது இதனாற்போதரும். ஆயினும் மாறுபடுமிடங்களைவிட்டு, ஏற்பன சில அதிகமாகக்காணப்படுஞ் செய்திகளைப் பின்னூலினின்றும் தழு வுதல் குற்றமுடைத்தன்று. இம்முறையில் முற்பட்ட இறையனார்

களவியற்பாயிரத்தாலும் ஏனையோர் கூற்றுக்களாலும் இடைச்சங்கச்செய்திகளாக அறியக்கிடைப்பவை என்னவெனின் :—பாரதகாலத்துக்குப்பின்னும் கடைச்சங்ககாலத்துக்கு முன்னுமாகிய இடைச்சங்கநாளிலே ஒருகடல்கோள் நிகழ்ந்ததுண்மையென்பதும், அந்நிகழ்ச்சியிற் பாண்டியநாட்டின் தெற்கெல்லையாகவிருந்த நிலத்தில் இரண்டு கூற்றமளவுள்ள பூமி அழிவுற்றதென்பதும், அவ்வழிவுநிலம் குமரிபஃறுளியாறுகட்கு இடையிலிருந்த பனைநாடென்பதும், அந்நாடு 49-சிறுநாடுகளாகவும் பகுக்கப் பட்டிருந்ததென்பதும், அக்கடல்கோட்காலத்து இருந்த பாண்டியன் முடத்திருமாறனென்பதும், அவன் தானிழந்த நிலத்துக்குப் பிரதியாகச் சிலகூற்றங்களைச் சேரசோழ நாடுகளினின்று பெற்றானென்பதும், அதுபற்றி நிலந்தருதிருவிற்பாண்டிய னெனவும் சயமாகீர்த்தியெனவும் அவ்வரசன் பெயர்பெற்றான் என்பதும், அவன்காலத்தேதான் தொல்காப்பியம் வெளியிடப்பட்டதென்பதும், கடல்கோளின்பின் அவ்வரசன் தென்மதுரையை விட்டுக் கூடலைத் தன் தலைநகராக்கினனென்பதும், ஆக்கிக் கடைச்சங்கத்தைத் தானே தொடங்கினனென்பதும் பிறவுமாம். இவ்வாறு கொள்ளநேர்ந்ததற்கு இன்னொரு காரணமுமுண்டு. அடியார்க்கு நல்லார் பிரமாணமாகக் கொண்டவற்றுள், இறையனார் பொருளுரை அவர்க்கு மாறுபட்டதோடு மற்றொரு பிரமாணமாகிய இளம்பூரணர் முகவுரையும் தலைச்சங்ககாலத்தில் நிலந்தருதிருவிற்பாண்டியன் நாளிலே கடல்கோள் நிகழ்ந்ததென்று கூறியதாகவும் காணவில்லை. இதனால் அவர்செய்திகளில் ஒன்றாகிய கடல்கோட்காலத்தை உண்மையென்று சொல்லுதல் கூடாமையாயிற்று. நாம் இவ்வாறெழுதியது சிறந்த உரையாளராகிய அடியார்க்குநல்லாரைக் குறைகூற வேண்டுமென்னும் எண்ணத்துடன் அன்று. சரித்திரமுறை முன்னோரில் அலக்ஷியஞ்செய்யப்பட்டமையால் நேர்ந்த வழுக்களிவையென்பதுமட்டும் இங்கே குறிப்பித்தோம். இது நிடக்க.

இதுவரை கூறிவந்த கடல்கோள், பாரதகாலத்துக் குப் பின் பாண்டிநாட்டின் தென்பாரிசத்திலே நிகழ்ந்ததுண்டா? என்பதே இனி நாம் ஆராயவேண்டுவது. இவ்வாராய்ச்சியில் அத்திசையில் அக்காலத்தே ஒரு கடல்கோள் நிகழ்ந்ததென்பதற்குப் பிரமாணங்

கள் கிடைக்குமாயின், அதனை இடைச்சங்க காலத்தின் கடைஎல்லையாக நாம் கொள்ளுதலில் யாதோரிழுக்குமின்றாகும். மிஸ்டர் 'இ. டேன்னன்டு' என்னும் ஆங்கிலபண்டிதர் எழுதிய 'சிலோன்' (Tennent's Ceylon) என்ற புத்தகத்தின் முதற்றொகுதியில், 7-ஆம் பக்கத்துக் கீழ்க்குறிப்பில் அடியில்வரும் வாக்கியங்கள் காணப்படுகின்றன:— "இந்தியாவிலிருந்து இலங்கையானது கடலோரத்தில் "உண்டாகியதோர் கலக்கத்தால் கிறிஸ்துபிறக்குமுன், 2387-ஆம் "வருஷத்தில் பிரிவுற்றதாகப் பௌத்தர்களாற் சொல்லப்படுகின்றது. இஃதன்றி, மற்றுமொருமுறை கி-மு. 504-ஆம் வருஷத்தில் "பாண்டுவாஸா" (இலங்கையரசரி லொருவன்) காலத்தில் அவ்வா "றே ஒரு சமுத்திரக்கலக்கம் உண்டாயிற்றென்றும், இதற்கு 200- "வருஷங்கட்குப்பின், கி—மு. 306-ல் ஆட்சிபுரிந்த தேவானம்பிரிய "திஸ்ஸாவின் காலத்தே கொழும்புப் பக்கத்தில் பூமியானது தன் "மட்டத்திற் றாழ்ந்து அமிழ்ந்ததாகவும் கூறப்பட்டுள்ளன. இலங்கா "தீபமான்மியங்களில் ஒன்றாகிய "இராஜாவளி" என்ற நூலில் அ "டியில் வருமாறு வரையப்படுகின்றன:—இக்காலங்களிற் கடலான "ஸ்ரீ கல்யாணி என்னும் இடத்தினின்று எழுலீக்அளவு தூரம் இரு "ந்தது. கல்யாணி அரசனால் துன்புறுத்தப்பட்ட 'தீருநான்வீன்' "என்னும் ஆசாரியனுக்கு நேர்ந்த துன்பங்காரணமாக, இலங்காதீப "த்தைக் காத்துவந்த தேவர்கள் சினங்கொண்டு பூமியின்மேற்கட "ல் பொங்கிவழியும்படி செய்வித்தார்கள். இராவணனுடைய கொ "டுமையால் துவாப்ரயுகத்தில் 25-அரமனைகளும் 4-லக்ஷந்தெருக்க "ளும் கடலால் அழிக்கப்பட்டதுபோலவே, இப்போது திஸ்ஸா "ராஜா காலத்திலே லக்ஷம் பெரும்பட்டணங்களும் 910-செம்பட "வர் ஊர்களும், முத்துக்குளிப்போர் வசித்த 400-கிராமங்களும் "ஆக மொத்தம் கல்யாணி ராஜ்ஜியத்தில் 12-ல் 11-பாகம் கடலால் "விழுங்கப்பட்டது. (இராஜாவளி Vol. II. pp. 180,190.)" என்பன. இச்செய்தி மகாவமிசத்தில் இன்னுஞ்சிறிது பிற்காலத்தே நிகழ்ந்ததாகச் சிற்சிலமாறுதலுடன் அதன் 22-ம் அத்தியாயத்துக்கூறப்படுகின்றது.* இவற்றால் இற்றைக்கு 4292-வருஷங்கட்குமுன் நிக

---

* The Tamils 1800-years ago. pp. 21.

ழ்ந்த முதற்கடல்கோள், ஒன்றாகவிருந்த இலங்கை இந்தியாக்களைப் பிரித்துவிட்டதென்பதும், இரண்டாங் கடல்கோள், கி-மு. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தே நிகழ்ந்ததென்பதும், மூன்றாங் கடல் கோள் மூன்றாம் நூற்றாண்டில் நடந்ததென்பதும் விளங்கின. இவற்றுள் முதலாஞ்செய்தி, கி-மு. 12-ம் நூற்றாண்டினதென்று தெளியப் பட்ட பாரதகாலத்துக்குப் பெரிது முற்பட்டிருத்தலோடு, இலங்கையும் இந்தியாவும் ஒன்றாயிருந்த பழங்காலத்து விஷயமாகவும் இருத்தலால், அதனைப் பிந்திய இடைச்சங்ககாலத்து நிகழ்ச்சியாகக் கூறுதல் பொருந்தாது. கி-மு. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்து இலங்கைத் தீவத்தின் தென்மேற்றிசையில், (அஃதாவது கன்னியாகுமரிச் சார்பாயுள்ளகடற்பிரதேசத்திலே)நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் கடல்கோள், தலைச்சங்கமிருந்த பாரதகாலத்துக்குச் சிலநூற்றாண்டுக்குப்பின் நிகழ்ந்ததாகத் தெரிதலால், அதனை முடத்திருமாறன் காலத்து நிகழ்ச்சியாக ஒப்புக்கொள்ளலாம். அஃதன்றேல், மூன்றாவதாகக்கூறப்படும் கி-மு. 3-ம் நூற்றாண்டில் நிகழ்ந்த கடல்கோளாகவே கொள்ளப்படும். எங்ஙனமாயினும் கி-மு. 6-ஆம் நூற்றாண்டுக்கும் கி-மு. 3-ம் நூற்றாண்டுக்கும் மத்தியகாலமே இடைச்சங்கவரலாற்றிற்கண்ட கடல்கோட்காலமென்பதற்கு யாதோரிழுக்குமில்லை. ஆகவே, முடத்திருமாறனாகிய நிலந்தருதிருவிற்பாண்டியன் காலமும், 'நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்து' என்பதனால் அப்பாண்டியன் காலத்துச் செய்யப்பட்டதாகவிளங்கும் தொல்காப்பியக் காலமும் அந்நூற்றாண்டுகட்கிடைப்பட்டதென்பதும் தானே பெறப்பட்டது.

இக்கடல்கோட் காலத்தவனாகிய முடத்திருமாறனுக்கு முந்தியிருந்த பாண்டியன் "பல்யாகசாலை முதுகுடுமி" என்பான். இவன் பஃறுளியாறும் பிறவும் கடல்கொண்டொழிதற்கு முன்பே இருந்தவனென்று அறியப்படுகின்றது. நெட்டிமையார் என்னும் பழம் புலவர் இவனைப்பாடிய பாடலொன்றில் (புறம்-கூ.)

"எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."

எனப்பஃறுளியாற்றைச் சுட்டிக்காட்டி 'அவ்யாற்று மணலினும் பல காலம் நீ வாழ்வாயாக' என்று அம்முதுகுடுமி என்ற பாண்டியனை வாழ்த்துதலால், அவ்வரசன் மேற்கூறிய கடல்கோட்கு முன்பிருந்தவனென்பது துணியப்படும். பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடிமருதனார் பாடிய மதுரைக்காஞ்சியில்,

"பால்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால்சிறப்பின்
நிலந்தரு திருவி னெடியோன் போல
..............மகிழ்ந்தினி துறைமதி."

என்னும் அடிகளில், நிலந்தருதிருவிற்பாண்டியன் அவையத்து (இடைச் சங்கத்து) விளங்கிய 'நான்மறைமுற்றிய' அதங்கோட்டாசான், தொல்காப்பியனார், பனம்பாரனார் முதலிய நல்லிசைப் புலவர்பெருமக்களைக் குறிப்பித்து, அவரெல்லாம் முதுகுடுமிபோல வேள்வித்துறையிற் பேர்போனவரென்றும், அப்புலவர் கூட்டரவை (சங்கத்தை) ப்பெற்றநிலந்தருதிருவிற்பாண்டியன்போல நீயும் விளங்குக என்றும் புகழப்பட்டிருத்தல் கண்டுகொள்க. [சங்கமென்ப துண்டென்பதற்குப் பழம் பிரமாணங்களில்லை எனக்கூறுவோர், "தொல்லாணை நல்லாசிரியர், புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின், நிலந்தருதிருவினெடியோன்" என மேற்குறித்த அடிகளாற் போதரும் சரித்திரவுண்மையை நுணுகி ஆராயக்கடவர்] இவ்வடிகளிற் சரித்திரவுண்மை அமைந்திருத்தலை ஓராது, ஆசிரியர் நச்சினார்க்கினியர் வேறுபொருள் கூறினார். இனி, மேற்கூறிய முதுகுடுமியைப்பாடிய காரிகிழார், நெடும்பல்லியத்தனார் என்னும் புலவரும் (புறம்-௬, ௬௪) அக்கடல்கோட்கு முற்பட்டிருந்தவராதல் சொல்லாதே விளங்கும். இவருள், காரிகிழார் அம்முதுகுடுமியைப்பாடிய புறநானூற்று ௬-வது பாட்டில்,

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅ துருகெழு குமரியின் றெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்."

என்புழி, பரதகண்டத்தின் தெற்கெல்லையாக அமைந்த குமரி என்பது கடலோ ஆறோ என்னும் ஐயத்தை நீக்குதற்கு, கிழக்கும் மேற்கும் கடலெல்லை கூறி, தெற்கெல்லையும் அதுவென்று கூறாது, நதியே யென்பதுபட 'குமரியின் தெற்கும்' எனக்கூறினமை காண்க. அப்புலவர்க்குப் பிற்காலத்திற் கடல் அவ்யாற்றை அழித்துக் கடலாக்கினமையால், பின்னிருந்தவரெல்லாம் "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்" எனவும் "வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத், தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும், வரைமருள் புணரியோடு பொருது கிடந்த, நாட்டியல் வழக்கம்" எனவும் இவ்வாறே வழங்குவாராயினர். இச்செய்தியைப் பிற்காலத்துக் கல்வியிற் பெரியாரும் "கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள், பொன்னி கரையழிந்து போனாளென், றிங்கீ, ருரைகிடக்க லாமோ வுலகுடைய தாயே, கரைகடக்க லாகாது காண்" (செந்தமிழ்த்தொகுதி-௩; பக்-அ) எனக் காவிரியைப் பாடியவிடத்துக் குறிப்பிட்டமை காண்க.

தலைச்சங்கத்தவரைப் பற்றித் தெரிந்த சில செய்திகளளவும், இடைச்சங்கத்தவர்க்கு அறியக் கூடவில்லை. அவ்விடைச்சங்கத்தவரில் துவரைக்கோமான் என்பான் ஒருவனுளன். இவன் கண்ணபிரான் வழியினராய்த் தென்னாடு வந்து ஆண்ட *வேளிர் வழியினனே என்று கருதப்படுகின்றான். இனி, தொல்காப்பியரும் அக்காலத்தவராகக் கொள்ளப்படுகின்றார். இவரை சமதக்கினி முனிவர் புத்திரர் எனவும், திரணதூமாக்கினி என்னும் இயற்பெயரினர் எனவும், அகத்தியர் மாணாக்கரெனவும் கூறுவர். உரையாசிரியர் "தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றி" என்பதனுரையில், தொல்காப்பியன் "பழைய காப்பியக்குடி யிலுள்ளோன்" எனப் பொருள் கூறினார். இவ்வாறு ஓர் குடி முற்காலமுதலே உள்ளதென்பது "காப்பியத் தொல்குடி கவின்பெற வளர்ந்து" என்னும் சிலப்பதிகார அடியால் தெரிகின்றது. இக்குடிப்பெயர் வெள்ளூர்க் காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார், பல்காப்பியனார் முதலிய பழம்புலவர்க்கு வழங்கி வந்தது. சோணாட்டில் சீகாழிக்கடுத்

* இவ்வேளிர் இன்னாரென்பது சென்ற பகுதியிற் 'செந்தமிழ்' உதவிப்பத்திராசிரியரால் நன்குவிளக்கப்பட்டுள்ளது.

துக் காப்பியக்குடி என்னும் ஓர் ஊர் உள்ளதாகத் தெரிகின்றது; காப்பியக்குடியினராய பார்ப்பார் பலர்க்கு உரித்தானமைபற்றி அஃது அப்பெயர்பெற்றதுபோலும்! "காப்பியம்" என்னும் ஒரு குடி வேதத்திலே வழங்கப்படுவதாகவும் தெரிகின்றேம். தொல்காப்பியரியபற்றிய இலக்கணநூலாற் பல விஷயங்கள் அறியக்கிடப்பன வாயினும், ஈண்டு விரிவஞ்சி விடுக்கப்பட்டது. இடைச்சங்கத் திறுதியினும், முதற்சங்கத்து ஆரம்பத்தினும் இருந்த முடத்திருமாறன் பாடலொன்று, 'எட்டுத்தொகையுள் ஒன்றாகிய நற்றிணையில் கoரு-ஆம் செய்யுளாக உள்ளது. அவ்வரசன் காலத்தவரும், தொல்காப்பியப் பாயிரஞ் செய்தோருமாகிய பனம்பாரனார் பாட்டொன்றும் குறுந்தொகை நுஉ-செய்யுளாகக் காணப்படுகின்றது.

இனி, மதுரையிலே சிலவருஷங்கட்கு முன்பு "சேங்கோன் தரைச்செலவு" என்னும் ஒரு நூல் அச்சிடப்பட்டுள்ளது. அந்நூலால், அது பஃறுளியாறு கடல்கொள்ளப்படுதற்குமுன்பு இயற்றப்பட்டதென்று தெரிகிறது. இதுபாடிய புலவர் 'முதலூழித்தனியூர்ச் சேந்தன்' என்பார். ['முதலூழி - முன்னே கடல்கொள்ளப்பட்ட பெரும்பரப்புத் தமிழ்நிலம்' என்று அந்நூலுரையிற் காண்டலால், இப்பெயரிற்கண்ட 'முதலூழி' என்பது யுகமில்லை. பிற்காலத்தார், அச்சொல் காலத்தைக் குறிப்பதாகக்கொண்டு, தலையிடைச் சங்கங்கள் கிருதயுகத்திலிருந்தன என்று கூறினர்.] இந்நூலில் சு-பாடலும் அவற்றின் உரையுமே இப்போது காணப்பட்டன. இது பெருவளநாட்டரசனாகிய 'செங்கோன்' என்பான், வேற்றரசரது மண்வேட்டுப் படையெடுத்து வென்ற சிறப்பைப்பற்றியது. இந்நூலானும் உரையானும் ஏழ்தெங்கநாடு, பெருவளநாடு எனனும் நாடுகளும், பேராறென்னும் நதியும், மணிமலை என்னும் மலையும், முத்தூர் என்னும்ஊரும், சக்கரக்கோ, அகத்தியன், நெடுந்துறையன், இடைக்கழிச்செங்கோடன் எனப்புலவர் சிலரும், பெருநூல், இயனூல், எனச் சிலநூல்களும், தாப்புலி என்னும் பாவிகற்பமும் பிறவும் தெரிகின்றன. இந்நூலாற் சிறப்பிக்கப்பட்ட செங்கோன் என்பவன், சூரிய வமிசத்தவனாகவும், ஏற்றுக்கொடியினனாகவும் கூறப்படுகின்றான். இவனாட்டைச்சார்ந்து பேராறென ஓராறும், வழிக்கழி என ஒருகட

ற்பகுதியும் இருந்தனவாகச் சொல்லப்படுகின்றது. இவ்வளவு செய்தி கொண்டதும் மிகப்பழமையானதுமாகிய இந்நூலைப் பண்டையுரையாசிரியரெவரும் எடுத்தாளாமைக்குச் சிறந்த காரணம் இன்னதென்று தெரியவில்லை. இதன் அமைப்பாற் பழைமை விளங்குகின்றதாயினும், இதனை யெடுத்தாளுதற்குப் பண்டையோர் ஆட்சியில்லாக்குறை தடையாகின்றது.

இதுகாறும் கூறிவந்தவற்றால், இடைச்சங்கமென்பது, கி.மு. 12 ஆம் நூற்றாண்டதாகிய பாரதயுத்தத்துக்குப்பின், கி. மு. 6-அல்லது 3-ஆம் நூற்றாண்டுவரை—அஃதாவது நமக்கு 2500 அல்லது 2205 வருஷங்களுக்குமுன்— இருந்ததாகத் துணியலாம்.

ஐயன் ஆரிதன்.

---

உ

சிவமயம்.

# புலவிநுணுக்கம்.

புலவிநுணுக்கம் புலவியினது நுணுக்கம் எனவிரியும். இங்கே புலவியென்றது புலவிக்காரணங்களை. அவை சொல், செயல், வடிவு வேறுபாடு முதலாகப் பலவகைப்படும். இப்புலவிநுணுக்கம் தலைமகள் தலைமகன்மாட்டுப் புலத்தற்காரணமிலதாகவும் காதல் கைம்மிகுதலால் உளதாகவுட்கொண்டு அதனை அவன்மேலேற்றிப் புலந்தலினாலே இன்பத்தை மீதூரச்செய்வதற்குச் சிறந்ததொன்றென்பது நன்குதெளியப்படும். இதனுடைய சிறப்புப்பற்றியே இதனைத் திருவள்ளுவனார் ஓரதிகாரமாக வைத்துக்கூறினார். ஏனைய கவிநூலாசிரியருள்ளும் பலர் தாம்தாம் இயற்றிய நூல்களுள் ஆங்காங்கு எடுத்தோதியிருக்கின்றார்கள். அவற்றுட் சில மேற்காட்டப்படும். அது நிற்க:

நம் செந்தமிழ்நாட்டுக் கவிஞர்போல இன்பங்கூறுவதிற் சிறந்தார் பிறர் இலர். அஃது அவர்களாலே இயற்றப்பட்ட பற்பல நூல்

*

களானே தெளியப்படும். அவர்கள் இன்பங்கூறும் வித்தகத்தினுள் வைத்து ஓர் வித்தகமாகக்கூறியது இப்புலவிநுணுக்க மென்னலாம். நம் தொல்லாசிரியர்கள் இன்பநூலைக் கடைபோக ஆய்ந்தனர் என்பது, அதி நுட்பமான இப்புலவிநுணுக்கமொன்றுகொண்டே துணியலாம். இப்புலவிநுணுக்கம் அதிநுட்பமுடைத்தென்பது "நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்—யாருள்ளி நோக்கினீ ரென்று' என்னுந் தேவர்வாக்கானே அறியப்படும். அதுநிற்க: மேலே புலவிக்காரணங்கள் சொல், செயல், வடிவுவேறுபாடு முதலாகப் பல வகைப்படும் என்றதை இங்கே விளக்கிக்காட்டுதும்.

### க-வது சொற்காரணமாக வந்த நுணுக்கம்.

## திருவள்ளுவர் குறள்.

### புலவிநுணுக்கம்.

யாரினுங் காதல மென்றேனா வூடினாள்
யாரினும் யாரினு மென்று. என்பது (ச) குறள்.

'யாரினுங் காதலம்' என்ற தலைவன்கூற்றிலே தலைவி நுணுகிச்சென்றுளாதலின், இது சொற்காரணமாக வந்த நுணுக்கமாயிற்று. காமநுகர்ச்சிக்குரியாராகிய இருபாலாரினும் யாமிருவரும் மிக்க காதலையுடையேம் என்னுங் கருத்தால் 'யாரினுங்காதலம்' என்று தலைவன் கூற, அதனைத் தலைவி என்னால் விரும்பப்பட்ட மகளிர் பலருள்ளும் நின்மாட்டு விருப்பமுடையேன் எனக் கூறினான் எனக்கருதியதே நுணுக்கம். தன்னால் விரும்பப்பட்ட மகளிர் பலருளர் என்னுங் கருத்துடையவனாய் 'யாரினுங்காதலம்' என்று தலைவன் கூறினானல்லனாகவும், அங்ஙனங் கூறினானாகவுட்கொண்டு 'யாரினும் யாரினும்' என்று தலைவி புலந்தமை காண்க.

### இதுவுமது.

இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள். என்பது (ரு) குறள்.

'இம்மைப்பிறப்பிற் பிரியலம்' என்ற தலைவன் கூற்றிலே தலைவி நுணுகிச்சென்றுளாதலின், இது சொற்காரணமாக வந்த நுணுக்க

மாயிற்று. காதன்மிகுதியால் 'இம்மைப்பிறப்பிற் பிரியலம்' என்று தலைவன்கூற, அதனைத் தலைவி மறுமைக்கட்பிரிவேன் என்னுங் குறிப்பினன் எனக்கருதியதே நுணுக்கம். மறுமைக்கட்பிரிவேன் என்னுங் கருத்துடையவனாய் 'இம்மைப்பிறப்பிற் பிரியலம்' என்று தலைவன் கூறினனல்லனாகவும், அங்ஙனங்கூறினனாகவுட்கொண்டு தலைவி புலந்தமை காண்க.

### இதுவுமது.

உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள். என்பது (௬) குறள்.

'உள்ளினேன்' என்ற தலைவன் கூற்றிலே தலைவி நுணுகிச்சென்றுளாதலின், இது சொற்காரணமாகவந்த நுணுக்கமாயிற்று. பிரிந்தகாலத்தும் நின்னை இடைவிடாது நினைந்திருந்தேன் என்னுங் கருத்தால் 'உள்ளினேன்' என்று தலைவன்கூற, அதனைத் தலைவி அருத்தாபத்திவகையினாலே உள்ளாதும் இருந்திருக்கவேண்டுமென்று கருதியதே நுணுக்கம். மறத்தற்குறிப்புத் தலைவனிடத்திலதாகவும் உளதாகக்கொண்டு 'மற்றென் மறந்தீர்' என்று தலைவி புலந்தமை காண்க.

### இதுவுமது.

### கந்தபுராணம்.

### தெய்வயானை திருமணப்படலம்.

மின்னார் தமக்கோ ரரசேவெறி வேங்கை வீயும்
புன்னாக வீயுங் கொணர்ந்தேன்புனை கிற்றி யென்ன
மன்னா வுனக்குப் பலருண்டுகொன் மாத ரென்னாத்
தன்னாவி யன்னான் றனைச்சிறியோர் தையல் போனாள்.
என்பது (௧௪௬) செய்யுள்.

'மின்னார்தமக்கோரரசே' என்ற தலைவன் கூற்றிலே தலைவி நுணுகிச் சென்றுளாதலின், இது சொற்காரணமாகவந்த நுணுக்கமாயிற்று. தலைவன், மகளிரிற்சிறந்தாளாதலினாலே 'மின்னார்தமக்கோரரசே' என்றுகூற அதனைத் தலைவி தன்னால் விரும்பப்பட்ட மகளிர் பலர்க்கும் அரசாயுள்ளவள் என்பது கருதிக் கூறினான் எனக் கருதியதே நுணுக்கம். தன்னால் விரும்பப்பட்ட மகளிர் பலருளர்

என்னுங் கருத்துடையவனாய் 'மின்னார்தமக் கோரரசே' எனக்கூறி னானல்லனாகவும், அங்ஙனங் கூறினானாகவுட்கொண்டு 'மன்னாவுனக்கு ப்பலருண்டு கொன்மாதர்' என்று தலைவி புலந்தமை காண்க.

## இதுவுமது.

## இராமாவதாரம்.

## பூக்கோய்படலம்.

செம்மாந்த தெங்கி னிளநீரையொர் செம்ம னோக்கி
யம்மாவிவை மங்கையர் கொங்கைக ளாகுமென்ன
வெம்மாதர் கொங்கைக் கிவையொப்பன வென்றொ ரேழை
விம்மா வெதும்பா வியராமுகம் வெய்து யிர்த்தாள்.

என்பது (கஎ) செய்யுள்.

'மங்கையர் கொங்கைகளாகும்' என்ற தலைவன் கூற்றிலே தலைவி நுணுகிச்சென்றுளாதலின் இது சொற்காரணமாக வந்த நுணுக்க மாயிற்று. தலைவன் பொதுவாக மங்கையர் கொங்கைகளை யொப்பா கும் என்றுகூற, அதனைத் தலைவி தன்னால் விரும்பப்பட்ட மகளிர் பலருளராதலினாலே பொதுவாகக் கூறினான் எனக்கருதியதே நுணுக் கம். தன்னால் விரும்பப்பட்ட மகளிர் பலருளர் என்னுங் கருத்து டையவனாய் 'மங்கையர் கொங்கைகளாகும்' எனக்கூறினானல்லனாக வும், அங்ஙனங் கூறினானாகவுட்கொண்டு 'எம்மாதர் கொங்கைக்கிவை யொப்பன' என்று தலைவி புலந்தமை காண்க.

## இதுவுமது.

போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொ டிண்டோள்
மாரன் னனையான் மலர்கொய்திருத் தானை வந்தோர்
காரன்ன கூந்தற் கயலன்னவள் கண்பு தைப்ப
வாரென்ன லோடு மனலென்ன வெய்து யிர்த்தாள்.

என்பது (கஅ) செய்யுள்.

'ஆர்' என்ற தலைவன்கூற்றிலே தலைவி நுணுகிச் சென்றுளாதலின் இது சொற்காரணமாக வந்த நுணுக்கமாயிற்று. தலைவன் ஆர் என்று இயல்பாக வினவ, அதனைத்தலைவி பொதுவாக வினவியதினால் இவற்கு என்போல விளையாடற்குரியராய மகளிர் பலருளர்போலும்

என்று கருதியதே நுணுக்கம். தன்னால் விரும்பப்பட்ட மகளிர்பலருளரென்னுங் கருத்துடையவனாய் 'ஆர்' என்று வினவினானல்லனாகவும் அங்ஙனம் வினவினானாகவுட்கொண்டு தலைவி புலந்தமைகாண்க.

### உ-வது செயல்காரணமாக வந்த நுணுக்கம்.

## திருவள்ளுவர் குறள்.

### புலவிநுணுக்கம்.

> தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
> ரிந்நீர ராகுதி ரென்று. என்பது (௬) திருக்குறள்.

'உணர்த்துதல்' ஆதிய தலைவன் தொழிலிலே தலைவி நுணுகிச் சென்றுளாதலின், இது செயல்காரணமாக வந்த நுணுக்கமாயிற்று. தலைவன் தன்னை யுணர்த்துமாறு பணிய, அதனைத் தலைவி பிறமகளிர்க்கும் இங்ஙனமே ஆவான் என்றுகருதியதே நுணுக்கம். புலத்தற்காரணம் நாயகனிடத்திலதாகவும், தன்னைப்பணிந்ததுபோலவே பிறரையும் பணிதற்கு ஆவானென்று கருதி 'பிறர்க்குநீரிந்நீரராகுதிர்' என்று தலைவி புலந்தமை காண்க. ஏனைய குறள்களும் இச்செயல்காரணம்பற்றி வந்தனவாதலின் அவற்றிற்கும் அங்ஙனமே ஏற்பனவாக வுரைக்க.

### இதுவுமது.

## இராமாவதாரம்.

### உண்டாட்டுப்படலம்.

> கொள்ளைப்போர் வாட்க ணாளங் கொருத்தியோர் குமர னன்னான்
> வள்ளற்று ரகலந் தன்னை மலர்க்கையாற் புதைப்ப நோக்கி
> உள்ளத்தா ருயிரன் னண்மே லுதைபடு மென்று நீசின்
> கள்ளத்தாற் புதைத்தி யென்ன மூன்னையிற் கனன்று மிக்காள்.
> என்பது (௩௧) செய்யுள்.

'அகலந்தன்னை மலர்க்கையாற் புதைத்தல்' ஆதிய தலைவனுடைய தொழிலிலே தலைவி நுணுகிச்சென்றுளாதலின், இது செயல்காரணமாகவந்த நுணுக்கமாயிற்று. கடினமாகிய மார்பிற்படின் அடி வருந்துமென்று கருதித் தலைவன் தன்மார்பைப் புதைப்ப, அதனைத் தலைவி தன்னுள்ளத்திலிருப்பாளுக்குப் படுமென்று புதைத்தான் எ

னக்கருதியதே நுணுக்கம். தன்மனத்திலொருத்தியுள்ளாள்; அவ ளுக்குப் படும் என்னும் கருத்துடையவனுய் நாயகன் புதைத்தானல் லனுகவும், அங்ஙனம் புதைத்தானுகவுட்கொண்டு 'உள்ளத்தா ருயி ரன்னாண்மே லுதைபடுமென் றுநீகின்— கள்ளத்தாற் புதைத்தி' என் று தலைவி புலந்தமைகாண்க.

## ரு-வது வடிவு வேறுபாடுகாரணமாக வந்த நுணுக்கம்.

### கந்தபுராணம்.

### தெய்வயானை திருமணப்படலம்.

உட்டெளி வில்லா நங்கை யொலிபுனற் றடத்தி னுடும்
கட்டழ குளதோர் காளை கவிரிதழ் வெளுப்பு நோக்கிக்
கிட்டியா னிற்க வுன்றன் கேழ்கிள ரதரத் தெச்சி
விட்டன ளியாரிங் கென்று வெகுளிகொண் டிகலிப் பேனுள்.

என்பது (கஉஎ) செய்யுள்.

'இதழ்வெளுப்பு' ஆதிய தலைவனுடைய வடிவு வேறுபாட்டின் கண் ணே தலைவி நுணுகிச் சென்றுளாதலின் இது வடிவுவேறுபாடு கா ரணமாகவந்த நுணுக்கமாயிற்று. நீராடுதல் காரணமாக இதழில் வெளுப்புண்டாக, அதனைத் தலைவி புணர்ச்சிகாரணமாக வந்ததாகக் கருதியதே நுணுக்கம். நீராடுதல் காரணமாக வந்த வெளுப்பைப் புணர்ச்சிகாரணமாக வந்ததாகவுட்கொண்டு 'கிட்டியானிற்கவுன்றன் கேழ்கிளரதரத்தெச்சி—விட்டனளியாரிங்கு' என்று தலைவி புலந்த மை காண்க.

சி. கணேசையர்.

---

# பராந்தகன் I.

இப்பத்திரிகையிற் சிற்சில பழங்கோயில்களிற் கண்ட சாசனங் கள் ஆங்காங்கு வரையப்பட்டுவருகின்றன. அவற்றைப்படிப்பவர் க்குதவியாகப் பின்வருவன எழுதப்படும். சென்றமாதப்பத்திரிகை யில் ஸ்ரீமாந்-நடேசசாஸ்திரியாரவர்கள் திருவெள்ளறை என்னுமிட

த்துள்ள சிலபழஞ்சாசனம் எழுதியிருந்தார். அவற்றிற் கூறப்பட்ட சோழமகாராஜனைக்குறித்துச் சாதனவாராய்ச்சியாற் பற்பலவிடத்தும் இதுகாறும் கொள்ளப்பட்ட வரலாறு பின்வருவன:—

இச்சோழ சக்கரவர்த்தியின் பெயர் கல்வெட்டுக்களிற் பெரும்பாலும் 'மதிரைகொண்ட கொப்பரகெசரிபன்மர்' அல்லது 'மதிரையும் ஈழமுங்கொண்ட கொப்பரகெசரிபன்மர்' எனவழங்கும். இவர் விஜயாலயன் மகனான ஆதித்தசோழனது குமாரர்.[1] பராந்தகன் வீரநாராயணன் என்பன இவர் மறுநாமங்கள்.[2] இவர் கி-பி. 905[3] ஆம் வருடம் தொடங்கி சோழசிம்மாசனமேறி அரசுசெலுத்துவாராயினர். இவரது இராச்சியபாரம் சற்றேறக்குறைய நாற்பதுவருடங்களென ஊகிக்கப்படுகின்றது. கோக்கிழானடிகளெனும் பட்டப்பெயர்பூண்ட இவரது மனைவியார் கேரளதேசத்தரசன் புதல்வி.[4] இவருக்கு இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்ஜயன் என மூவர் மக்களிருந்தனராகத் தெரியவருகிறது. அவர்களில் இராஜாதித்தன் சிவபக்தியிற் சிறந்து விளங்கினனாய்த் திருநாமநல்லூரில் ஓர் சிவாலயஞ் சமைத்தான். திருநாமநல்லூரும் அவன் பெயரானே இராஜாதித்தபுரமென வழங்கிற்று. இக்கோயிலுக்கு அவனும் அவனைச்சார்ந்தாரும் பலபரிசளித்தும் பரிபாலித்தார்களென்பது அவ்விடத்துள்ள கல்வெட்டுக்களாற் போதருவது. அவர் மனைவியார் மிலாட்டரையர் (மலைநாட்டரையர்) புத்திரியாகிய மஹாதேவடிகள். போர்க்கோலங்கொண்டு இராஷ்டிரகூடத்தரசனான மூன்றாவது கிருஷ்ணனோடு தக்கோலம் என்னும் இடத்துப் போர்புரியும்பொழுது, அன்னானுடைய சிற்றரசனும், அவன் உடன்பிறந்தாளை மணந்தானுமாகிய பூதுகன் என்பவனாற் கொல்லப்பட்டான். இது நிகழ்ந்தது கி-பி. 949-இல்[5]

---

1. South Indian Inscriptions: Vol. I. p. 112.
2. Do. Vol. II. No. 76.
3. Epigraphia Indica: Vol. VII. Dates of Chola kings.
4. No. 335 of Government Epigraphia list for 1902.
5. Epigraphia Indica: Vol. V. p. 167.

பராந்தகனது இரண்டாங்குமாரரான கண்டராதித்தர் என்பார் காவிரியின் வடகரையிற் றன்பேரால் ஒரூர் அமைத்தார். இவர் மனைவி உடையபிராட்டியார் செம்பியன் மாதேவியார். கண்டராதித்தர் என்னும்பெயர் இவரொருவற்கன்றி வேறியாருக்கும் இருந்ததாகக் காணப்படாமையின், நம்பியாண்டார்நம்பி தொகுத்த ஒன்பதாந் திருமுறைக்கண் 'மின்னுருருவமேல்' என்றற்றொடக்கத்துப் பதிகம் இவராலியற்றப்பட்டிருக்கலாமென்பது அப்பதிகத்தின் ஈற்றுச் செய்யுளாகிய—

சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடிதன்னைக்
காரார்சோலைக்கோழிவேந்தன்றஞ்சையர்கோன்கலந்த
வாராவின்சொற்கண்டராதித்தனருந்தமிழ்மாலைவல்லார்
போராவுலகிற்பெருமையோடும்பேரின்பமெய்துவரே.

என்ற பாவினால் விளங்குதலோடு, எட்டாஞ்செய்யுளில் 'வெங்கோல் வேந்தன் றென்னனாடு மீழமுங்கொண்ட திறற்,செங்கோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன்' என்றஇவ்விரண்டடிகளாற் பெறப்படுவோன் இவர் தந்தையேயாவனென்பதும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க.

மூன்றாங்குமாரனான அரிஞ்ஜயன் என்பானுக்கு அரிகுலகேசரியென்றொரு மறுபெயருண்டு. இதுநிற்க; பராந்தகன்காலத்து நடந்த சிலவிஷயங்களை ஈங்கு எடுத்துக்கூறுவோம். 'மதிரையும் ஈழமுங் கொண்ட' என்பதனால் இவர் பாண்டியநாட்டையும இலங்கைத் தீவையும் வென்றார் என்பது பெறப்படும். அவ்வாறு கோடற்கு மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களிற் காணப்படும் இவரது கற்சாஸனங்களும் பின்னெடுத்துக் காட்டியிருக்கும் மஹாவமிசவிருத்தாந்தமும் தக்கசான்றாம். அன்றியும், கலிங்கத்துப்பரணியிற் சோழசக்கரவர்த்திகளின் இராசபாரம்பரியத்தில் இவரைக் கூறுமிடத்து, ஜயங்கொண்டார் 'ஈழமுந்தமிழ்க் கூடலுஞ்சிதைத் திகல்கடந்ததோ ரிசைபரந்ததும்' என்றார். இவ்வரசரால் வெல்லப்பட்ட பாண்டிய அரசன் இராஜசிம்மன் என்பான்.[6] இப்பாண்டியனுக்கு உதவிபுரியும் பொருட்டு ஈழத்தரசனால் அனுப்பப்பட்ட தானையும் சோழனால் தோற்கடிக்கப்பட்டதென்பது கி-பி. 920-ல் வரையப்பட்ட உதயேந்

6. South Indian Inscriptions : Vol. II. Udayendram plate.

திரத்துச் செப்பேட்டால் விளங்கும். உதவியாகவந்த சிங்களர் தானையை வென்றமாத்திரத்தானே ஈழமுங்கொண்டானென்பது பெறப்படாது. அவ்வாறு பெறின் இழுக்காம். என்னை ? முப்பத்தெட்டாவது[7] இராச்சியவருஷம் வரையும் (அஃதாவது கி-பி. 943-வரையும்) உள்ள பராந்தகன்காலத்துக் கல்வெட்டுக்கள் அவ்வரசரை மதுரைகொண்டானெனக் கூறுதலன்றி, மதுரையும் ஈழமுங்கொண்டானெனக் கூறுகின்றில. ஆனாற் பிற்காலத்துக் கல்வெட்டுக்கள் பராந்தகனது இவ்விருவெற்றியையும்பற்றிக் கூறுகின்றன. ஆதலின் இவ்வரசன் இலங்கையை வென்றது கி-பி. 943-ல் என்க. ஈழத்தின்மேற் போருக்குச் சென்றதன்காரணம் எவ்விடத்துங் காணப்பட்டதில்லையெனினும், காசிபன்என்னும் அத்தீவின்அரசன், இராஜசிம்மபாண்டியன் சோழனோடு யுத்தஞ்செய்த காலத்து அப்பாண்டியற்குத்தன் தானையையனுப்பி உதவிபுரிந்ததே அதுவாகும். இலங்கையில் அரசு செலுத்திய மன்னர்களுடைய சரித்திரத்தைக்கூறும் மஹாவம்சம் என்னும் நூலில் ஐந்தாம் காசிபனென்பவன் அத்தீவில் கி-பி. 929-முதல் 939-வரை அரசாட்சிசெய்தானென்றும், அவன், சோழசக்கரவர்த்தியால்தோல்வியுண்ட பாண்டியன் வேண்டுகோளுக்கு இணங்கி, அவற்கு உதவிக்காக ஓர்படையை விடுத்தானென்றும், அப்படை சோழனால் முறியடிக்கப்பட்டதென்றும் காண்கிறோம். மஹாவம்சத்திற் கூறும் வரலாறும், சிலாசாஸனங்களாலறியப்படும் இச்சோழசக்கரவர்த்தியின் விஷயங்களும் ஒத்திருத்தலின், இதனுண்மைக்கோர் ஐயமிலது. இதுவுமன்றி, இப்பராந்தகஅரசர் வாணராஜனை வேரறக்கெடுத்து, அவனது அரசாட்சியைக் கைப்பற்றித் தனது சிற்றரசருள் ஒருவரான இரண்டாம் பிருதிவீபதியை ஆந்திரபூமியின் மேற்கிலுள்ள அவ்வாணதேயத்திற்கதிபதியாக்கி, அவனுக்கு மாவலிவாணராயன் என்னும் பட்டமும் சூட்டினார்.[8] இவர், அக்காலத்திருந்த பல்லவவரசனோடும் பொருது வெற்றிபெற்றிருத்தல் வேண்டுமென்பது, அவனது நகரமான 'உதயசந்திர மங்கலத்தைப் பராந்தகன்

---

7. No. 363 of 1902 and South Indian Inscriptions: Vol. VI. p. 19

8. Sonth Indian Inscriptions: Vol. II. p. 381 and Epigraphia Indica: Vol. IV. p. 222.

*

அழித்துத் தன்பேரால் வீரநாராயணச்சேரி என்றொருநகரம் கி-பி. 920-ல் ஆக்கினன் '[9] என்பதால் அறியலாகும். சிதம்பரத்துச் சிவன்கோயிலைப் பொன்னாலிழைத்தவரும் இவரேயாவர். 'கூத்தனும் குலோத்துங்கன் கோவையும்' என்று செந்தமிழ்வாயிலாக வந்த வியாசத்தில் இவருக்கே குலோத்துங்கன் என்றொரு பெயரிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அப்பெயர் கல்வெட்டுக்களிலும் செப்பேட்டிலும் இவ்வரசருக்குக் கூறப்படவில்லை.*

பாண்டியனையும் காசிபனையும் வென்று மதுரையும் ஈழமுங்கொண்டு பல்லவனகர் அழித்து, வைதும்பனைத்தோல்வியடைவித்து,[10] வாணனை வேரறக்கெடுத்து அவனாணையைப் பிரதிவீபதிக்களித்த இச்சோழசக்கரவர்த்தியின் ஆற்றலும் அவரது நாட்டின்பரப்பும் உற்றுநோக்குமிடத்து மிகப்பாராட்டத்தக்கனவேயாகும்.

க. வை. சுப்பிரமணிய ஐயர்.

---

*குறிப்பு.

[ஐயரவர்கள் எழுதியவாறு 'கூத்தரும் குலோத்துங்கன்கோவையும்' என்றவியாசத்திற் பராந்தகனுக்குக் குலோத்துங்கப்பெயருண்டென்று குறிக்கப்படவில்லை. ஆனால் "புகழேந்திஒட்டக்கூத்தர்' என்னும் வியாசத்து அவ்வாறு வரைந்தேன். அஃது ஆதாரமில்லாக்கூற்றன்று. மிஸ்டர் ஸூவெல்துரை வெளியிட்ட "லிஸ்ட்ஸ் ஆவ் ஆண்டிகுபுடீஸ்" என்ற புத்தகத்தின் முதற்றொகுதி 157-ஆம் பக்கத்தே, தென்னார்க்காடு ஜில்லா நாராயணவனம் அகஸ்தியேசுரர் கோயிலில், சகா-826-ல் (கி.பி. 904) குலோத்துங்கன் என்பானது 11-வது ஆட்சிவருஷத்து அமைந்தசாஸனமொன்றும், அத்தொகுதி 263-ஆம் பக்கத்தே, திருச்சிராப்பள்ளிஜில்லா பிரம்பலூர்த் தாலூகாவைச் சார்ந்த ஆடுதுறையிலுள்ள பழைய சிவன்கோயிலின் வடக்குப்பிராகாரத்தே கலி-4000-ஆம் ஆண்டில்(கி.பி. 899) குலோ

---

9. Epigraphia Indica: Vol. V. p. 162.

10. No. 685 of Inscriptions: of South India in Vol. VII. of **Epigraphia Indica.**

த்துங்க சோழனென்பான் அக்கோயிலுக்குக்கொடுத்த தானசாஸன மொன்றுமாக இரண்டு சாஸனங்கள் குலோத்துங்கசோழனதாக வரையப்பட்டுள்ளன. இவற்றுள் முதலாவதாகிய கி. பி. 904-ல் அமைந்த சாஸனம், அச்சோழனது 11-வது ஆட்சிக்காலத்தே வரையப்பட்டது என்பதனால், அவ்வரசன் முடிசூடியகாலம் கி. பி. 893-ஆகும். இரண்டாவது சாஸனம் கி. பி. 899-ஆகும். இவ்விரு காலமும் பராந்தகனுக்கே பொருந்தியன. பராந்தகன் I முடிசூடிய காலம் ஐயரவர்கள்எழுதியவாறு கி. பி. 905-என்பது ஒருதலையாக நாட்டப்பெறுமாயின் மேற்காட்டிய இரண்டு சாஸனங்களினுங் கண்ட குலோத்துங்கசோழன் அப்பராந்தகனுக்கு முந்திய சோழனென்றுசொல்லல்வேண்டும். எங்ஙனமாயினும், கி. பி. 10-ம் நூற்றூண்டின் தொடக்கத்தும் குலோத்துங்கனொருவன் இருந்தனனென்று யான் எழுதியது, ஸூவெல்துரையவர்கள் எழுத்தைக்கொண்டேயன்றிப் பிறிதில்லை. அத்துரையவர்கள் மேற்கூறிய சாஸனகாலங்களைப் பிழையென்று கூறியிருப்பினும், பராந்தகனுக்கேனும் அவற்கு முந்திய சோழற்கேனும் அக்குலோத்துங்கப்பெயர் அமையக்கூடாதென்பதற்கு நியாயமின்மையாலும், அச்சாஸனங்களிரண்டும் வெவ்வேறிடங்களில் அமைந்தும், சோழனொருவனது காலத்தை நன்கு விளக்குதலாலும், கி. பி. 12-ஆம் நூற்றூண்டிலிருந்த குலோத்துங்கற்கு முன்னும் அப்பெயர்பெற்ற சோழனொருவன் இருந்தனன் போலும் என ஊகிக்கலாயிற்று.]

பத்திராசிரியர்.

---

உ

# தனிச்செய்யுட்கோவை.

—:o:—

ஆதிசரவணப் பெருமாட்கவிராயர் மலையாளஞ்சென்று இராசாவைக் கண்டபோது கூறியது.

இலைநாட்டும் வேற்காத்துச் சேதுபதி தரிசனத்துக் கேழு நாளோர்
மலைநாட்டு ராசன்வந்து காத்திருந்த வாசல்வித்து வான்யான் கண்டாய்
கலைநாட்டிற் பெண்ணெனவே செய்தசரா ஞசனகன் கன்னிக் காகச்
சிலைநாட்டி வளைத்தபுய வீரகே ரளராம செயசிங் கேறே.

இக்கவியைக் கேட்டவுடன் 'சேதுபதி தரிசனத்துக்கு மலைநாட்ட ரசரிற் காத்திருந்தவர் யார்?' என இராசா வினவ, 'சேதுபதி என்பது வருணனுக்கும் பெயராம்: ஆதலால் அவனைக்காண்பதற்கு மல்லை நாட்டுகின்ற இராசனாகிய இராமன் தருப்பாசனத்தில் எழுநாட் காத்திருக்கவில்லையா' எனக்கூறினரெனவும், அதற்கு இராசா மிகமகிழ்ந்து உபசரித்தனரெனவும் கூறுவர்.

---

சேதுபதி மந்திரி முத்திருளப்பபிள்ளை ஓர் கவிஞருக்கு 'நான் நூறு பொன் கொடுக்கச்சொன்னேன்' என்று எழுத ஒருவனை ஏவிய போது, அவன் 'நானூறு பொன்' என்றெழுதி வாசிக்க, உடனே அதனைக் கிறுக்கி எழுதும்படி சொல்லினர்; அப்போது அக்கவிஞர் இக்கவியைக் கூறி நானூறு பொன்னும் பெற்றார் என்பர்.

உறுக்குமதி வேந்தருக்குங் கள்வருக்கும் நீதிதப்பி யொளிக்கின்றோர்க்குங்
கிறுக்குவரச் செயுந்துரையே பாவாண ரோலையினுங் கிறுக்குண் டாமோ
பொறுக்குமர சுரிமைமுத்து ராமலிங்க சேதுபதி பூமி யெல்லா
நிறுக்குமதி மந்திரிமுத் திருளப்பா வருளப்பா நிருபந் தானே.

---

அம் முத்திருளப்பபிள்ளையவர்கள், சேதுபதியரசுரிமைநகரங்களில் விவாகமில்லாத கன்னியர் மிகவிருப்பது கேள்வியுற்றுக் குறுணித்தாலி பண்ணிவரச்செய்து ஒவ்வொரு கன்னிக்குங்கொடுத்துத் தக்கபடி செலவிற்குங் கொடுத்து விவாகம் நடப்பித்தனர்; அதனை வியந்து ஓர் கவிஞர் கூறியது.

அமரிக்கை யாளன்முத்து ராமலிங்க சேதுபதி யவனிக் கெல்லாஞ்
சுமுகப்ர தாபனெங்கண் முத்திருளப் பேந்த்ரமந்த்ரி துலங்கு நாளிற்
சமருக்கென் றெதிர்த்த மன்னர் தனையிவில்லை மதனொருவன் றவிர மின்னார்
குமரிக்குட் கன்னியா குமரியல்லான் மற்றிலைப்பெண் குமரி தானே.

---

சிவகங்கையை ஆண்ட மருதுபாண்டியனது வள்ளன்மையையும், ஏகபத்தினி விரதத்தையும் வியந்து ஓர் கவிஞர் கூறிய கவிகள்.

தேனுந்து தாமன் மருதேந்த்ர ராசன் தியாகங்கண்டு
வானும்பர் தாருமம் புலவனொன் றூர்வடி வேற்குகனென்
போனும் புலவனென் றூன்புதன் றானும் புலவனென்றூ
ஞானுங் கவியென்று சுக்கிரன் றானு நவின்றனனே.

பாணு ரியல்புணரும் பண்பன்றன் னின்பம்
பாணு ரியாறியாப் பண்பன்—றிரணு
ரணிமருது பாண்டில்விழ வன்றுதைத்தோன் யாரும்
பணிமருது பாண்டியபூ பன்.

---

இக்கவி, எழுமலை ஜமீந்தார் மூங்கிலணை நல்லகாமநாயக்கரவர்கள் கொடையை வியந்து ஓர் கவிஞர் கூறியது.

ஆராயும் வேதியர்க்கு ளாருமில்லை யறிவுகெட்ட வலையருமப் படியேயாவர்
சிராயதுருக்கருக்குட்சீதக்காதிசிறப்புடையவணிகருக்குட்செந்தில்காத்தான்
காராளர் தங்களுக்குள் வெண்ணையூரான் கருதரிய மறவருக்குண்மூவ ராயன்
பேரான மூங்கிலணை நல்லகாமா தொட்டியர்க்கு ணீயொருவன் பேர்பெற்
[றாயே.

---

கன்னிவாடி ஜமீந்தார் மலையாண்டியப்பய நாயக்கரவர்களது கொடையினை வியந்து ஓர் கவிஞர் கூறியது.

கல்லொக்குஞ் சிந்தைமுட் டாட்டுளை காள்கொடை கற்கவென்றால்
வல்லக்க வார்குல ஞாசிங் கையன் வரத்துதித்த
செல்வக் குமாரன் மலையாண்டி யப்பய சிங்கத்துக்குப்
பல்லக்குக் கொம்பு சுமந்தீரொன் றூற்புத்தி பாலிக்குமே.

இந்த ஜமீந்தாரவர்கள், துறைசையாதீனத்துத் திராவிட மகாபாஷ்ய கர்த்தர் ஸ்ரீ சிவஞானயோகிகளுடைய மாணக்கருள் ஒருவராகிய இராசபாளயம்-சங்கரமூர்த்திக் கவிராயரவர்களுக்கு யானைக்கன்றும் வளநாடுங் கொடுத்து உபசரித்தது பலருந் தெரிந்த விஷயமே.

---

எட்டையபுர முத்துப்புலவரவர்கள் சிவகிரி ஜமீந்தாரவர்கள்மீது திக்குவிசயம்பாடி யரங்கேற்றியபோது, பல்லக்குப் பரிசு கொடுப்பதாக நிச்சயித்ததைச் சிலர் தடுக்கவுடன்பட்டிருந்ததைத் தெரிந்து இவ்வெண்பா முதலிரண்டடியைக்கூற, அதைக்கேட்ட ஜமீந்தாரவர்கள் தங்களுக்குச் செய்யுங் காரியங்களிலே நான் மறுத்துப் பேசவில்லையே யென்றார்கள். உடனே புலவரவர்கள் என் விஷயமாக நான் கூறவில்லையே யெனப் பின்னிரண்டடியைக் கூறினார்கள்.

வாக்கிரண்டு பேசா வரகுணரா மேந்திரனே
வாக்கிரண்டு பேச மனம்வைத்தான்—றூக்கு
மருவலரைக் கொல்லென்றான் வந்தடைந்த போது
வெருவாமற் காப்போமென் றான்.

பின்பு பல்லக்கு முதலியன கொடுத்துபசரித்துத் திக்குவிசயத்தைக் கொல்லங் கொண்டான் ஜமீந்தாரவர்களிடத்துஞ் சேற்றூர் ஜமீந்தாரவர்களிடத்தும் வாசித்துக்காட்டிவரச் சொல்லப், புலவரவர்கள் இரண்டிடத்துக்கும்போய் நடந்ததை இக்கவியாற்கூறினர்கள்

வேண்டாத மருவலரை வென்றரசு புரியுமுயர் வேந்தே நாளுந்
தூண்டாத மணிவிளக்கே வரகுணரா மேந்திரனே சொல்லக் கேளாய்
கூண்டார வாரமுட னின்றுனு பதியுடன்யான் கூடப் போனேன்
வாண்டாயன் றலைமறைந்தான்செம்பொன்வடமலைத்திருவன்வழங்கினனே.

கொல்லங்கொண்டான் ஜமீந்தாரவர்கட்கு 'வாண்டாயன்' என்பதும் சேற்றூர் ஜமீந்தாரவர்கட்கு 'வடமலைத்திருவன்' என்பதும் புராதனமாய் வருகிற பட்டப்பெயர்.

---

இது, சேற்றூர் சிவகிரி ஜமீந்தார்களிருவருக்கும் போர் நடக்கும்போது உதவிபுரிவதற்காகச் சொக்கம்பட்டித் தானுபதிபொன்னம்பலம் பிள்ளையவர்கள் தண்டிகையிலேறிக் கொண்டு சேற்றூருக்கு வந்தவுடன் நடந்ததை ஓர் கவிஞர் கூறிய வெண்பா.

சேற்றூரார் நெஞ்சந் திடப்படுமே தென்மலையான்
றேற்றறுமென் றேடித் துயர்படுமே—மாற்றரசர்
தெண்டனிடுஞ் சின்னணைஞ்சான் சேனு பதிப்பொன்னன்
றண்டிகையைக் கண்டவுடன் றான்.

---

இது, சேற்றூர்ச் சிவப்பிரகாச துரையவர்கள் போசனம் பண்ணிக் கரசுத்தி செய்ய வெளிவரும்போது வந்துகண்ட சொக்கம்பட்டித் தானுபதி பொன்னம்பலம் பிள்ளையவர்கள் கூறிய வெண்பா.

ஒருகையிலே யன்ன மொருகையிலே சொன்னம்
வருகையிலே சம்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்
சீமானு மெங்கள் சிவப்பிரகா சத்திருவக்
கோமானுக் குள்ள குணம்.

---

இஃது, அச்சிவப்பிரகாசத்துரையவர்கட்கு மேற்கூறிய பொன்னம்பலம் பிள்ளையவர்கள் வரைந்து விடுத்த கவி.

இலவே யனைய விதழ்மட மாதரொ டின்புறுதல்
குலவே லரசர்க் கியல்பல்ல வேயிக் குவலயத்திற்
பலபேர் புசித்துக் கழித்தே யெறிந்திடும் பாண்டஞ்சுத்தி
யலவேமிதன் சேறைச் சிவப்பிர காச வகளங்கனே.

---

மேற்கூறிய சேற்றூர் ஜமீந்தாரவர்கட்கு முன்புவந்து ஓர் கவிஞர் இக்கவியிலே 'தெரியும்' என்பதுவரைகூறினர்; உடனே அவர்கள் கவிஞர் கழுத்தைப்பிடித்துக்கொண்டு இங்கே இதுவரையும் வசைகூறினவரொருவருமில்லை; ஆதலாற் குறைக்கவியு நசையாகவேண்டும் எனக்கூறக் கவிஞர் அவ்வாறே பின்னர் வருமாறு கூறினர்.

படிவாங்கப் படும்பாடு பரமசிவ னறிவனவன் பங்கில் வாழும்
வடிவாரு மறிவளவண் மக்களுக்குந் தெரியுமிந்த வருத்தந் தீர்ப்பாய்
முடிவேந்த ரடிதாழ்ந்து முறைமுறையே திறையளக்கு முகுந்தா மேலாந்
துடிவேந்தா ரதிகாந்தா துரைத்திருவா தரைக்கொருவா சுகிர்தவானே.

---

இது, கல்போது ஜமீந்தாரவர்களாகிய முத்துக்குமாரசாமிப் பாண்டியனவர்கள் தம் கடன்வருத்தநீக்கவேண்டுமென்று எட்டையபுரத்திலும் பேரையூரிலும் போய்ச் சொன்னபோது உடன்படாமையால் ஆற்றங்கரை ஜமீந்தாரவர்களிடத்திற்போய்க் கூறிய வெண்பா.

எட்டையா பேரையா வென்றுரையே யென்றுரைத்தே
னெட்டையா பேரையா வென்றுரைத்தார்—கட்டக்
குறைகடற்கு ளீர்த்துக் கொடுபோகா தாற்றங்
கரையதனிற் சேர்த்தெனைநீ கா.

---

பழனி ஜமீந்தாரவர்கள் ஓர்புலியைச்சுட்டுப் பெருமிதமுடன் வந்திருக்குஞ் சமயத்திலே மதுரையிலிருந்துவந்த ஓர்கவிஞர் கூக்குரலிட்டுப்போய் இக்கவியைக்கூறினர் அதைக்கேட்டு அந்தக் கலிப்புலியைச் சுடுவதற்கிரண்டுபைரூபா கொடுவென்றுத்தரவுசெய்யக் கவிஞர் பெற்றுவந்தார் என்பர்.

பையா டரவப் பணியேந்து சொக்கர் பதியைவிட்டு
வையா புரிக்கு வரும்போதி லென்னை வழிமறித்து
மெய்யாத் தொடர்ந்து கலிப்புலி தானும் வெருட்டுகின்ற
தையா விசய கிரித்துரை யேயுன் னடைக்கலமே.

(இன்னும் வரும்)

இராமசாமிக்கவிராயர்,
சேற்றூர்ச் சமஸ்தானவித்வான்.

ஸ்ரீ:

# சென்னி அநபாயன் குலோத்துங்கன்.

**கம்பர்** ஏரெழுபதுநூற்கண்—

முடியுடைய மன்னவரின் மூவுலகும் படைத்துடைய
கொடியுடைய மன்னவரிற் குலவுமுதற் பெயருடையா
னிடியுடைய வொலிகெழுநீ ரொழுபத்தொன் பதுநாட்டுக்
குடியுடையான் சென்னிபிற ரென்னுடையார் கூறீரே.

எனவும், இராமாவதாரப் பிலநீங்கு படலத்து—

புவிபுகழ் சென்னிபோ ரமலன் றேள்புகழ்
கவிகடம் மனையெனக் கனக ராசியுஞ்
சவியுடைத் தூசுமென் சாந்து மாலையு
மவிரிழைக் குப்பையு மளவி லாதது.

எனவும், ஷை மருத்துமலைப்படலத்து—

வன்னிநாட் டியபொன் மௌலி வானவன் மலரின் மேலான்
கன்னிநாட் டிருவைச் சேர்ந்த கண்ணனு மாளுங் காணிச்
சென்னிநாட் டெரியல் வீரன் றியாகமா விநோதன் றெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள நோக்கிப் போனன்.

எனவும் பாடியவற்றுள் சென்னி என்னும் பெயரால் ஒரு சோழனைப்புகழ்ந்துரைத்துள்ளார். சென்னி என்பது சோழர் பொதுப்பெயராயினும், கம்பர் தம்மாற் புகழ்தற்குரிய சோழனை மூன்றிடங்களிலும் அப்பெயரொன்றானே வழங்கியவாற்றால் இவராற் புகழப்பட்ட சோழனுக்கு அதுவுமோர் பெயராமெனத் துணியப்படுகின்றது. கம்பர் காலத்தவரான ஒட்டக்கூத்தரால் உலாப்பாடப்பட்ட விக்கிரம சோழன், அவன் மகன் குலோத்துங்க சோழன், அவன் மகன் இராசராச சோழன் என்னும் மூவர் சோழருள் இராசராசன் றந்தையாகிய குலோத்துங்கனுக்குச் சென்னி என்பதும் ஓர் பெயராமென்று

"சிற்றம் பலமுந் திருப்பெரும்பே ரம்பலமு
மற்றும் பலபல மண்டபமுஞ்—சுற்றிய

மாளிகையும் பீடிகையு மாடமுங் கோபுரமுஞ்
சூளிகையு மத்தெருவுந் தோரணமு—மாளுடையான்
கோயிற் றிருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையுந்—தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்து
முன்னிற் கடல்களின் மூழ்குவித்த—சென்னி
திருமகன் சீராசராசன்."

என இராசராசசோழதேவருலாவின் கண்ணே கூத்தர் கூறியவாற்றாற் றெளியலாகும். கூத்தர் தாம் பாடிய மூன்றுலா விறுதியிலும், தம் முலாப்பெற்ற அவ்வரசர் பெயரானே தனித்தனி ஓர் வெண்பாவும் கூறியுள்ளார். விக்கிரம சோழ தேவருலாவிறுதியிலுள்ள அவ்வெண்பா

கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வைய
மளந்தா யகளங்கா வாலிலைமேற் பாயல்
வளர்ந்தாய் தளர்ந்தாளென் மான்.

என்பது. இதனாற் சோழருக்குப் பொதுவாக வழங்கப்பட்ட அகளங்கன் என்னும் பெயரையும் விக்கிரமன் தனக்குரியதோர் சிறப்புப்பெயராகக் கொண்டிருந்தனனென்று தேறலாகும். "தவிராத சுங்கந் தவிர்த்தோன் கவிராசர், போற்றும் பெரியோ ரிவர்பின்பு பூதலங்க, ளாற்றுந் திருத்தோ ளகளங்கன்'' எனக் குலோத்துங்க சோழ தேவருலாவின்கண்ணும் சுங்கந்தவிர்த்த சோழன்பின் பட்டமெய்திய இவ்விக்கிரமனை அகளங்கன் எனக் கூறியதனையும் நோக்கிக்கொள்க. இராசராசசோழ தேவருலாவிறுதியிலுள்ள அவ்வெண்பா,

அன்று தொழுத வரிவை துளவணிவ
தென்று துயில்பெறுவ தெக்காலந்—தென்றிசையி
னீரதிரா வண்ண நெடுஞ்சிலையை நாணெறிந்த
வீரதரா வீரோ தயா.

என்பது. இதனால், இராசராசனுக்கு வீரன் என்பதும் பெயராமெனக் கொள்ளலாகும். "ஆரந்தான் கண்டா ளயிரா பதந்தொழுதாள், கோரந் தெரியவுங் கும்பிட்டாள்—வீரன், படாகைப் பெரு
*

ம்புலியும் பார்த்தொழிந்தாள்" என இராசராச சோழ தேவருலாவின்கண் வருதலால் இதனுண்மை யுணர்க. இனிக் குலோத்துங்க சோழ தேவருலாவிறுதியிலுள்ள அவ்வெண்பா,

இன்றும்யான் மீள்வ தறியே னிரணியனை
யன்றிரு கூறு வடர்த்தருளிக்—கன்றுடனே
யாவின்பின் போன வனக னனபாயன்
மாவின்பின் போன மனம்.

என்பது. இதனாற் குலோத்துங்கனுக்கு அநபாயன் எனபதும் பெயராமெனத் தேறலாகும். இவனைப்பற்றிய உலாவின்கண்ணே "பெருமா னநபாயன் பேரிய மூன்றுந், தருமார் வாரந் தழங்க" எனவும், "ஆழிப் பெருமா ளபய னநபாயன், சூழிக் கடாயானை தோன்றுதலும்" எனவும் கூத்தர் வழங்கியவாற்றானும் இவனுக்கிப்பெயர் வழக்குண்மை கண்டுகொள்க. இவன், குலோத்துங்கன் என்பதனையே இயற்பெயராகக் கொண்டவனென்பது, "பெரும்பரணி கொண்ட பெருமாள் தரும்புதல்வன், கோற்றக் குலோத்துங்க சோழன்" என இவனுடைய உலாவின்கண்ணே கூத்தர் கூறியதனால் அறியப்படும். இவற்றால் ஒட்டக்கூத்தர் காலத்தே சென்னி, அநபாயன், குலோத்துங்கன் என்னும் பெயர்களால் விளங்கியோன், இராசராசன் தந்தையே என்பது தேறப்பட்டதாம். அக்கூத்தர்காலமும் கம்பர்காலமும் ஒன்றுதல்பற்றிக் கம்பராற் சென்னி என்னும் பெயராற் புகழப்பட்ட சோழனும் அவ்விராசராசன் றந்தையாகிய குலோத்துங்கனேயாவன் என்றுய்த்துணரலாகும். இவனே கம்பருக்குப் பல்வகைச் சிறப்பும் செய்தவனாதலால் கம்பர் அந்நன்றி பாராட்டி இவனைப் புகழ்ந்துரைத்தனராவர். கம்பர் இராமாவதாரம் பாடிமுடித்த காலத்து இச்சோழன் இருந்தனனில்லையென எண்ணுகின்றேன். இருந்தனராயின் "அறைபுகழ்ச் சடையன் வாழி" என்றதுபோல இவனுக்கும் வாழிகூறி முடிப்பர். இராமாவதார ஏட்டுப்பிரதிகள் சிலவற்றில்

வான்வளஞ் சுரக்க நீதி மனுநெறி முறையெந் நாளுந்
தான்வளர்ந் திடுக நல்லோர் தங்கிளை தழைத்து வாழ்க
தேன்வளர் தருத மாலைத் தெசரத ராமன் செய்கை
யானனந் தறிந்த பாட லிடையறு தொளிர்க வெங்கும்.

என ஓர் வாழ்த்துச் செய்யுள் காணப்படுகின்றது. இதன் கண்ணும் சோழன் வாழ்த்தப்படாமை காண்க.

இனி, இவன் "ஆடுங்கடைமணி" என்னும் பாட்டால் (செந்தமிழ்த் தொகுதி-௨ ; பக்கம்-௪௦௬) செய்யுள் செய்தலில் வல்லவன் என்பதும், ஒட்டக்கூத்தரை வழிபட்டுக் கல்விபயின்றவன் என்பதும் அறியலாகும். மேற் "சிற்றம் பலமுந் திருப்பெரும்பேரம் பலமும்" என்பது முதலாகவந்த கண்ணிகளால் இவன் சிவபிரான்பாற் பேரன்புடையனென்பதும், தில்லைப் பேரம்பலமெல்லாம் பொன்னாற்குயிற்றினனென்பதும், திருக்காமக் கோட்டத் திருப்பணி முற்றும் புரிந்தனனென்பதும் அறியப்படும். இவன் தில்லையிற் செய்த திருப்பணியெல்லாம் குலோத்துங்க சோழ தேவருலாவில் விரித்துரைக்கப் பட்டுள்ளன. அவற்றை *"தாதைக்குந் தங்கள் தபனற்குந் தோலாத" என்பது முதலாகவருங் கண்ணிகளாற் றெளிந்துகொள்க. இவனுடைய உலாவின்கணன்றி இராசராச சோழ தேவருலாவிலும், இவன் தில்லையிற்செய்த பெரிய பொற்பணியெல்லாம் எடுத்துக் கூறியுள்ளாராதலால் இது முன்னோர்சிறப்பைப் பின்னோனுக்கேற்றி வழங்கியதுபோலாகாது. இஃதன்றித் தக்கயாகப்பரணிக்கண்ணும் இராசராசனாகிய இவன்மகனை வாழ்த்துமிடத்து 'தில்லையி லேர்பெறு மண்டபம் வைத்த பிரான்மகன் வாழியே' என்பது முதலாக இவன் தில்லையிற் செய்த பெரும்பணிகளை எடுத்தோதியுள்ளார். தில்லையம்பல முகடுமட்டிற் பொன்வேய்ந்துபோய இவன்குலத்துமுன்னோர்போலாது, இவன் சிற்றம்பலம் பேரம்பலம் மண்டபம் மாளிகைபீடிகை மாடம் கோபுரம் தோரணவாயில் தெரு முதலாகப் பலவற்றையும் பொன்னாலணிந்து தில்லையைப் பொன்மயமாக்கினன் என்பதுபற்றி அவ்வரிய பெரிய பொற்பணிகொண்டே இவனை இரண்டுலாக்களிற் கூத்தர்புகழ்ந்தாரெனத் தெரிகின்றது. இவனுடைய தில்லைப்பொற்பணியைப் புகழ்ந்துள்ள அவ்விரிடங்களினும் "புறம்பிற் குறம்பனைத்து, முன்னிற் கடல்களின் மூழ்குவித்த சென்னி" எனவும் "தில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத், தொல்லைக் குறும்பு தொகுத்தெடுத்து" எனவும் வருதலால்

* செந்தமிழ்த்தொகுதி-௩. பக்கம்-௧௧௩.

இவன் தில்லைநகர்க்கண் திருமன்றின்முன்றிலிற் சிறு தெய்வமாகிய பழம்பகையை அடியோடு பெயர்த்தெடுத்துக் கடலில் மூழ்குவித்தான் எனத்தெரிகின்றது. இதனாற்றில்லைமன்றின் முன்றிலிலிருந்த விண்டுசயனத்தைப் பெயர்த்தெடுத்துக் கடலிற்றார்த்தனன் என்பது கூறிற்றாம். இதனையே தக்கயாகப் பரணிக்கண்ணும்

'முன்றிற்கிடந்த கருங்கடல்போய் முன்னைக்கடல்புகப் பின்னைத்தில்லை
மன்றுக்கிடங்கண்ட கொண்டல்பெற்ற மாகதமேருவை வாழ்த்தினவே'

என்பதனாற் கூறியுள்ளார். முன்றிற்கிடந்த கருங்கடல் என்றது, முன்றிலிற் பள்ளிகொண்டருளிய கருங்கடல்போல்வண்ணன் எ-று. முன்னைக்கடல்புக என்றது, முன்றான் பள்ளிகொண்டருளிய கடற்கண்ணே பின்னும்புக. எ-று. தில்லைமன்றுக்கு இடங்கண்ட என்பதனால், அதற்கு முன்னெல்லாம் தில்லைமன்று இடம்பற்றாததாய்ச் சிறிதாயிருந்ததென்று கருதப்படுகின்றது. இராசராசசோழதேவருலாவில் 'புறம்பிற் குறும்பனைத்து முன்னிற்கடல்களின் மூழ்குவித்த' என்றதுக்கேற்ப இத்தக்கயாகப்பரணிக்கண்ணும் 'முன்னைக்கடல் புக' என்றார். *'வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே' என்பதனாற் றிருவாதவூரர் காலத்துக்கு முன்றொட்டு உள்ளதாகத்தேறப்பட்ட இத்தில்லையில் விண்டுசயனம் இச்சென்னிகுலோத்துங்கனால் தில்லைமன்றுக்கு இடங்காணவேண்டி அழிக்கப்பட்டதென்பதொன்றானேஇவனதுசைவப்பெரும்பற்றும் வைணவவெறுப்பும்அறியப்படும். இவனுடைய பேரவைக்கண்ணேதான் அரனதிகன், அரியதிகன் எனப் பலபலவாதம் நிகழ்ந்தனவாம். இவையெல்லாங் கண்டுகேட்டபின்னேதான், கல்வியிற்பெரியாராகிய கம்பர் 'அரனதிக னுலகளந்த வரியதிக னெனவுரைக்கு மறிவிலார்க்குப், பரகதிசென்றடைவரிய பரிசேபோல்' எனப்பாடினராவரெனக் கருதல்தகும்.

(இன்னும் வரும்.)

---

ரா. இராகவையங்கார்.

பத்திராசிரியர்.

---

* திருச்சிற்றம்பலக்கோவை. அசு.